
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 12 நவம்பர் -1999 இதழ் - 11



"ஆதியிலே தேவன் வானத்தையும்,
பூமியையும் சிருஷ்டித்தார்." ஆதி. 1:1

*வெளியிடுவோர்*
காங்கயம் கிறிஸ்துவின் சபையார்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701
தமிழ்நாடு, இந்தியா.

## அரிய வாய்ப்பு

திருமறை ஆசான் மாத இதழின் நிறுவன ஆசிரியர் சகோ. **E.Z. செல்வநாயகம்** அவர்கள் பல்வேறு தலைப்புகளின் கீழாக எளிய நடையில் எழுதி, அநேகர் பயன் பெற்ற 40க்கும் அதிகமான கட்டுரைகளைத் தொகுத்து **"ஆத்தும ஆதாயப் பிரசங்கங்கள்"** என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளோம்.

தரமான தாளில் அச்சிடப்பட்டு, நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, அழகிய தோற்றமுடையதாய் வடிவமைக்கப்பட்டுள்ள **இந்நூல் சுமார் 250 பக்கங்களைக் கொண்டது.**

சத்தியம் விரும்பிகள் அனைவருக்கும் நிறைந்த பயனைத் தரக் கூடியது. தபாலில் பெற விரும்புவோர் அனுப்ப வேண்டிய தொகை ரூ. 30/– மாத்திரமே.

முகவரி : **தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
**தபால் பெட்டி எண் 27, காங்கயம் – 638 701.**

குறிப்பு : தயவு செய்து M.O. கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதுங்கள்.

## ஆசானின் அறிவுரையிலே...

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | "ஏன் இந்த மாற்றம்?" | 1 |
| 2. | உலக வீடியோ வேதாகமக் கல்லூரி (விளம்பரம்) | 10 |
| 3. | ஊழியர்களைத் தாங்குவதெப்படி? | 11 |
| 4. | பெண்கள் பகுதி | 16 |
| 5. | வாலிபர் பகுதி | 20 |
| 6. | வெளிப்படுத்தின விசேஷம் | 24 |
| 7. | தெரிந்து கொள்ளுங்கள் | 28 |
| 8. | எது என் பாவத்தைக் கழுவி சுத்திகரிக்கும் | 31 |

// THIRUMARAI AASAAN

Editor
S. RAJANAYAGAM

Honorary Editor
J.C.CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 12 November-1999 Issue -11

ஆசிரியவுரை

# ஏன் இந்த மாற்றம்?

மானிடர்களாகிய நாம் வாழும் இந்த உலகம் மாற்றத்திற்குப் பெயர் போனது என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஏனெனில், உலகில் மாற்றமா அல்லது மாற்றமே உலகமா என்று சொல்லுமளவுக்கு மாற்றங்கள் துரித கதியில் நடந்து, மிக முக்கியமான இடத்தைப் பெற்றுவிட்டது. தினம் தவறாமல் ஏதாவதொரு மாற்றம் நடந்து கொண்டுள்ளது. நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், அவ்வப்பொழுது நிகழும் மாற்றங்களை ஏற்றுக்கொண்டு, அவைகளை சீரணிக்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளோம். எனக்கு மாற்றமே பிடிக்காது, ஆகவே நான் இவைகளை ஏற்றுக்கொள்ளமாட்டேன் என யாரும் ஒதுங்க முடியாது.

இப்படி நம்மைச் சுற்றிலும் ஏற்படும் மாற்றங்களை நாம் அப்படியே கவனித்துப் பார்த்தால், அவைகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை, 1. ஏற்படும் மாற்றங்கள். 2. ஏற்படுத்தப்படும் மாற்றங்கள். இதில், முதலாவது வகை தானாகவும், இரண்டாவது வகை பிறராலும் ஏற்படும். இக்கருத்தை இன்னும் கொஞ்சம் உற்றுப்பார்த்தால், தானாக ஏற்படும் இயற்கை மாற்றங்களுக்கு உலகத்தைப் படைத்த தேவன் காரணமாகவும், பிறரால் ஏற்படும் மாற்றங்களுக்கு, உலகிலிருக்கும்படி படைக்கப்பட்ட மனிதன் காரணமாகவும் இருக்கிறார்கள் என்பது தெரியும். முதல் வகை மாற்றத்திற்கு உதாரணமாக காலம், மற்றும்

பருவங்களில் ஏற்படும் மாற்றங்களையும், இரண்டாவதற்கு ஆதாரமாக, சமூகம், மற்றும் ஆன்மீக நிலைகளில் ஏற்படும் மாற்றங்களையும் குறிப்பிடலாம்.

தேவ ஞானத்தின்படியாக நிகழும் அபார மாற்றங்களுக்கு, அதன் தன்மைக்கேற்ற, அர்த்தமுள்ள விளக்கங்களை நாம் அப்படியே தரமுடியாததாகையால், அவைகளைக் கொஞ்சம் அப்படியே ஒதுக்கிவிட்டு, மாந்த அறிவின்படியாக நிகழும் மாற்றங்களை மாத்திரம் நாம் கவனிப்போம். பொதுவாகவே, மனித ஞானத்தின் படியாக ஏற்படுத்தப்படும் எல்லா மாற்றங்களுக்கும், ஒரு வலுவான அடிப்படைக் காரணமிருக்கும். அக்காரணங்கள், சில சமயங்களில் வெளியே தெரியும், பல சமயங்களில் வெளியே தெரியாது. ஆனால் காரணமில்லாது மாற்றங்கள் நிகழாது.

சரி, நம்மைப் படைத்த தேவனுடைய சித்தம் செய்ய விரும்பும் பிள்ளைகளாகிய நாம், ஆன்மீக காரியங்களுக்கு, அத்துமீறிய முக்கியத்துவம் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளதால், அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களின் ஆன்மீக வாழ்வில், அவர்களின் பக்தி உணர்வில் ஏற்பட்ட ஒரு மாற்றம் குறித்தும், அதற்கான அடிப்படைக் காரணம் என்ன என்பது குறித்தும் இப்பொழுது பார்ப்போம்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில், கிட்டத்தட்ட இயேசுக் கிறிஸ்துவுக்கு இணையாக மதிக்கப்பட்ட, மாபெரும் மனிதனாகிய மோசே, தனது 120-வது வயதில் மரித்து, கர்த்தரால் அடக்கம் செய்யப்பட்ட பிறகு (உபா. 34:6), பெருந்திரளாக இருந்த இஸ்ரவேல் ஜனங்களை, வழிநடத்தும், தலைமைப் பொறுப்பை, தேவ அங்கீகாரத்தோடு யோசுவா ஏற்றுக்கொண்டான் என்பது நமக்குத் தெரியும். (யோசுவா. 1ம்அதிகாரம்) இந்த யோசுவா வீரத்திலும், தீரத்திலும், பக்தியிலும், பணிவிலும், உறுதியிலும் தான் மோசேயுக்கு சற்றும் சளைத்தவனல்ல என்பதை எல்லா வகையிலும், செயல்படுத்திக்காட்டினதுமல்லாமல், தலைமைப் பண்பில் தான், மோசேயைக் காட்டிலும் பக்குவப்பட்டவன் என்பதையும் தனது சீரான வழிநடத்துதல் மூலம் நிரூபித்துக் காட்டினான். இஸ்ரவேல் ஜனங்களை, வெற்றிகரமாக கானானுக்குள் பிரவேசிக்கச் செய்து, தேவ ஆலோசனையின் படியாக, பாலும் தேனும் ஓடும் அத்தேசத்தை 12 கோத்திரத்தாருக்கும் பங்கிட்டுக்கொடுத்தான்.

இந்த யோசுவா, தனது இறுதி நாட்களில், தன்னால் வழிநடத்தப்பட்ட இஸ்ரவேலின் மூப்பரையும், தலைவரையும், நியாயாதிபதிகளையும் தேவனுடைய சந்நிதியில் நிற்கச் செய்து, (யோசுவா 24:1), மறக்கும் இயல்பை சற்று அதிகமாகவே கொண்ட இஸ்ரவேலுக்கு, ஒட்டுமொத்த சரித்திரத்தை நினைவுபடுத்தி, தேவனுக்கு அவர்கள் விசேஷமானவர்கள் என்பதை எடுத்துச் சொல்லி, தேவன் அவர்களுக்குச் செய்த நன்மைகளை விவரித்துக்காட்டி, அந்த தேவனுக்கு அவர்கள் என்றென்றும் உண்மையாக இருக்கவேண்டிய அவசியத்தை

வலியுறுத்தி, அவர்களுடைய சிந்தனையைக் கிளறி, உணர்வுகளைத் தட்டியெழுப்பும் ஒரு பிரிவுபசார பிரசங்கத்தை மிக நேர்த்தியாகச் செய்தான்.

ஒரு பெருந்தலைவனின் மரண வாக்கு மூலமான அப்பிரசங்கத்தில், "ஆகையால் நீங்கள் கர்த்தருக்குப் பயந்து, அவரை உத்தமமும் உண்மையுமாய் சேவித்து, உங்கள் பிதாக்கள் நதிக்கு அப்புறத்திலும், எகிப்திலும் சேவித்த தேவர்களை அகற்றிவிட்டு, கர்த்தரைச் சேவியுங்கள்" (யோசுவா. 24:14) என்று வலியுறுத்திவிட்டு, அத்தோடு நிறுத்தாமல், தொடர்ந்து, கர்த்தரை மாத்திரம் சேவிக்கும் ஒரு தீர்மானத்தை நீங்கள், என்னுடைய கண்களுக்கு முன்பாக எடுத்தே ஆகவேண்டும் என்பதுபோல நெருக்கி, அடுத்த வசனத்தில், "**கர்த்தரை சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள்; நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம் பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைக் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான்**" (யோசுவா.24:15)..

யோசுவாவின் வாயிலிருந்து புறப்பட்ட ஆழமும், அர்த்தமும் மிகுந்த இவ்வார்த்தைகள், கூடியிருந்தவர்களின் நெஞ்சில் ஒரு நெகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. அவர்கள் உடனடியாக, ஏக குரலாக, "... **வேறே தேவர்களைச் சேவிக்கும்படி கர்த்தரைவிட்டு விலகுகிற காரியம் எங்களுக்குத் தூரமாயிருப்பதாக**" (24:14) என்றார்கள். இதிலும், திருப்திப்படாத யோசுவா, மேலும் அவர்களைச் சோதிக்கும்படியாய், "**நீங்கள் கர்த்தரைச் சேவிக்கமாட்டீர்கள்** என்றபோது..." (24:10), ஜனங்கள் மீண்டும் யோசுவாவை நோக்கி: "**அப்படியல்ல நாங்கள் கர்த்தரையே சேவிப்போம்**" (24:21) என்றார்கள்.

ஆனால், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இதே இஸ்ரவேல் ஜனங்களைப் பார்த்து, மறுரூபமலையில் இயேசுவோடு காட்சி தரும் அளவுக்கு, (மத்.17:3) தனது தீர்க்கதரிசன ஊழியத்தில் நெடிதுயர்ந்து நின்ற எலியா, இஸ்ரவேலை ஆண்ட ஆகாப் என்பவனின் நாட்களில் "... **நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் என்றான். "ஜனங்கள் பிரதியுத்தரமாக அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை"** (1 ராஜா. 18:21), ஆம், அப்பொழுது அங்கே கூடியிருந்த திரளான ஜனங்கள் பேசாமடைந்தகளாக காட்சி தந்ததார்கள்.

சுமார் 600 ஆண்டுகளுக்கு முன்பாக யோசுவா என்ற தேவ மனிதன் "மூன்றில் ஒன்றை தெரிந்தெடுங்கள்" என்ற போது, தயக்கமோ, தடுமாற்றமோ, இல்லாமல், "**கர்த்தரை விட்டு விலகுகிற காரியம் எங்களுக்கு தூரமாயிருப்பதாக**" என்றும், "**அப்படியல்ல, நாங்கள் கர்த்தரையே சேவிப்போம்**" என்று சொன்ன தேவஜனம் யோசுவாவின் தகுதிக்கு சற்றும் குறையாத தேவ மனிதனாகிய

எலியா, ஒரு நெருக்கடியான நிலையில், ஜனங்களைப் பார்த்து, " இரண்டில் ஒன்றைத் தெரிந்தெடுங்கள்" என்றபோது **"மாறுத்தரம் ஒன்றும் சொல்லாமல் மவுனம் சாதித்தார்களே, அது ஏன்? ஏன் இந்த மாற்றம்?** மாற்றத்திற்கு காரணம் என்ன? என்ன நடந்தது இடையில்? சொல்லுங்கள். இரண்டு இடங்களிலும் அதே தேவஜனம். இரண்டு இடங்களிலும் தேவனால் பயன்படுத்தப்பட்ட வல்லமை நிறைந்த மனிதர்கள்; இரண்டு இடங்களிலுமே ஏதாவது ஒன்றை தெரிந்தெடுக்கும்படியாகத்தான் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஆனால், அன்று **"கர்த்தரையே சேவிப்போம் என்று உரக்கக் கத்தினவர்கள்"**. இன்று; **ஊசி விழுந்தால் சத்தம் கேட்குமளவுக்கு மவுனமாக நின்றார்களே, அது ஏன்? ஏன்?**

மனிதனால் ஏற்படுத்தப்படும் எல்லா மாற்றங்களுக்கும் ஒரு அடிப்படை காரணம் இருப்பதுபோல், இதற்கும் ஒரு வலுவான காரணம் இருந்தது. இந்த மாற்றம் உடனடியாக நடந்த ஒரு மாற்றமல்ல. இதற்கு தேவைப்பட்டது சுமார் 600 ஆண்டு காலம். இந்தக் காலக்கட்டத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் மெல்ல, மெல்ல, கர்த்தரை விட்டு விலகி, பதில் கூட சொல்ல முடியாத ஒரு கேடான நிலையை அடைந்துவிட்டார்கள். யெகோவாவாகிய கர்த்தர் உண்மையான தேவனா? அல்லது பாகால் உண்மையான தெய்வமா? என்று சந்தேகிக்கும் அளவுக்கு நிலை சென்றுவிட்டது. (1.ராஜா.18:24). இதற்குக் காரணம் அந்நாட்களில், இஸ்ரவேலுக்குள்ளாக பெருகி அவர்களது நெஞ்சில் இடம்பிடித்துவிட்ட **"விக்கிரக வணக்கமே"**

இஸ்ரவேலின் சரித்திரத்தை நாம் கொஞ்சம் அலசிப்பார்த்தால் இக்கேடான நிலை எப்படி வந்தது என்று ஓரளவு புரிந்துகொள்ளலாம். விக்கிரக வணக்கத்தை தேவன் "ச்சீ" (உபா.7:26, ஏசா 30:22) என்று ஒதுக்கச் சொல்கிறார் ஆம்! அது யெகோவாவின் பார்வைக்கு அருவருப்பானது. ஆனாலும் "யோசுவா உயிரோடிருந்த சகல நாட்களிலும் கர்த்தர் இஸ்ரவேலுக்கு செய்த அவருடைய கிரியைகள் யாவையும் அறிந்து யோசுவாவுக்குப் பின்பு வெகுநாள். உயிரோடிருந்த மூப்பர்களுடைய சகல நாட்களிலும் இஸ்ரவேலர் கர்த்தரை சேவித்தார்கள்". (யோசுவா 24:31). இவர்களுக்குப்பின் எழும்பின அடுத்த சந்ததியார் பாகால்களையும் அஸ்தரோத்தையும் சேவித்தார்கள். (நியா.2:10-13).

இவர்களின் இக்கேடான செயல்களுக்குத் தண்டனையாக தேவன் இவர்களை எதிரிகளிடம் ஒப்புக்கொடுத்து இவர்களை ஒடுக்குவார். இறுகப் பிடித்து ஒடுக்குகிறவர்களினிமித்தம் இவர்கள் தவிக்கும்போது கர்த்தர் மனஸ்தாபப்பட்டு இறங்கி இவர்களை இரட்சிக்கும்படி நியாயாதிபதிகளை எழும்பப்பண்ணுவார், அப்பொழுது இவர்கள் கர்த்தரை சேவிப்பார்கள். நியாயாதிபதிகள் மரிக்கும்போது, மீண்டும் அந்நிய தேவர்களைப் பின்பற்றவும், சேவிக்கவும், பணிந்துகொள்ளவும், தங்கள் பிதாக்களைக் காட்டிலும், கேடாய் நடப்பார்கள். இதைத்தான் நியாயாதிபதிகள் புத்தகம் முழுவதிலும் நாம் பார்க்கமுடியும். அதாவது, யோசுவாவின் நாட்களிலும், அதைத் தொடர்ந்து

வாழ்ந்த மூப்பர்களின் நாட்களிலும் பக்தி விசயங்களில் ஓரளவு நிலையாக இருந்த இஸ்ரவேல், நியாயாதிபதிகளின் நாட்களில், யூரோக்கிலிதோன் புயலில் சிக்கிய கப்பல் போல, மெய்யான தேவனுக்கும், பொய்யான தெய்வங்களுக்குமிடையில் மகா தள்ளாட்டமாய்த் தள்ளாடினார்கள்.

அதன் பிறகு ராஜாக்களின் காலம் தொடங்கியது. ஒருவேளை, சவுல்ராஜா கொஞ்சம் சரியில்லையென சொல்லும்படியான நிலையிருந்தாலும், அவன் நாட்களில் விக்கிரக வணக்கம் இல்லை. பிறகு தாவீது அரசனின் நாட்கள், அது இஸ்ரவேலின் பொற்காலம். கர்த்தர் தாவீதுடனே இருந்தார். அதன் பிறகு, ஞானி என்று பெயர் பெற்றும், தனது இறுதிக் காலத்தில் மூடனாக ஜீவித்த சாலமோன் ராஜாவின் காலம். இந்த துன்மார்க்கனின் மோக இச்சை ஒழுக்க ரீதியான எல்லைக்கடந்தபடியால், இவன் தேசத்தின் எல்லையைக் கடந்து அந்நிய ஜாதியான அநேக ஸ்திரீகள் மேல் ஆசை வைத்தான். அப்பொழுது, "கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி; நீங்கள் அவர்களண்டைக்கும் அவர்கள் உங்களண்டைக்கும் பிரவேசிக்கலாகாது: **அவர்கள் நிச்சயமாய்த் தங்கள் தேவர்களை பின்பற்றும்படி உங்கள் இருதயத்தை சாயப்பண்ணுவார்கள் என்று சொல்லியிருந்தார்.** (1. ராஜா. 11:2). "ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற் பழங்களுக்குச் சமானம்" என்று தன்னால் எழுதப்பட்ட தேவ வார்த்தையைத் தானே மறந்து, சரியான நேரத்தில் தரப்பட்ட இந்த எச்சரிப்பை துச்சமென மதித்து கொஞ்சமாக 700 மனைவிகளையும், 300 மறுமனைவிகளையும் தேடிக்கொண்டான். விளைவு? "**.... அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்". (1.ராஜா.11:4)**

இப்படி, அறிவை அடகு வைத்ததன் மூலம் ஞானசூன்யமாகிவிட்ட, சாலமோன் ராஜாவுக்குப் பிறகு ஒட்டுமொத்த இஸ்ரவேல் ராஜ்ஜியம் வடக்கு, தெற்கு என்று பிரிந்து போனது. இதன் பிறகு வடக்கு ராஜ்ஜியம் இஸ்ரவேல் என்றும், தெற்கு ராஜ்ஜியம் யூதா என்றும் அழைக்கப்பட்டது. இதில், வடக்கு இராஜ்ஜியம் என்றழைக்கப்பட்ட இஸ்ரவேலின் துவக்கமே துன்மார்க்கமானது. ஆம், இஸ்ரவேலின் முதல் ராஜாவாகிய யெரொபெயாம், பலிபீடங்களையும், மேடைகளையும் கட்டினதோடல்லாமல், இரண்டு கன்றுக்குட்டிகளை உண்டாக்கி, கோவிலைக் கட்டி, ஒன்றைத் தாணிலும், பெத்தேலிலும் வைத்து, எருசலேமில் இருப்பது போன்ற பொய்ப் பண்டிகைகளை ஏற்படுத்தி, மெய்யான தேவ வணக்கத்தை விட்டு விலகுதல் என்ற விபரீத விளையாட்டுக்கு வித்திட்டான், இவனைத் தொடர்ந்து அரசாண்ட 19 ராஜாக்களில் ஒருவன் கூட , ஜனங்களை முழுமையாக மெய்யான வணக்கத்தின் பால் திருப்பவேயில்லை. "அங்கே கூரைக்கு கொள்ளி வைப்பவன் இருப்பதற்குள் சுமாரான பையன்" என்று சொல்லப்படும் கதைப்போல், யோராம், யெகூ போன்றவர்கள் சுமாரான மோசம் (2. ராஜா.3:1,2;10:31,36). மற்றவர்கள் பற்றியெல்லாம் கேட்கவே வேண்டாம்.

எப்படியோ, பரிசுத்த தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு உன்னத ஜனம் விக்கிரகங்களின்பால் கொண்ட நாட்டத்தால், தங்களின் பக்தி நிலையை மாற்றி கொஞ்சம், கொஞ்சமாக விலகி, இந்த விபரீத விளையாட்டின் வெற்றிக்குக் கிடைத்த பரிசாக, கி.மு. 722ம் ஆண்டு அசீரியர்களால் மேற்கொள்ளப்பட்டு, சிதறடிக்கப்பட்டு, உருத்தெரியாமல் அழிந்து, சரித்திரத்தின் பக்கங்களிலிருந்து முற்றிலுமாக எடுத்துப்போட்டப்பட்டார்கள். (2.ராஜா.17:1-8). ஆம், இதன்பிறகு, இவர்கள் பற்றிய பேச்சு வேதாகம சரித்திரத்திலேயோ அல்லது உலக சரித்திரத்திலேயோ இல்லை.

சரி, தேவனுடைய ஜனங்ளின் பக்திநிலையில் ஏற்பட்ட மாற்றத்தை மையமாக வைத்து, நமக்கு பயன்படும் ஒன்றிரண்டு, பாடங்களைக் கற்றுக்கொள்ள முயற்சிப்போம்.

## I யோசுவாவின் காலமும் – முதல் நூற்றாண்டுக் காலமும்

மாற்றம் தரும் முதல் பாடம், இரண்டு காலங்களையும் ஒப்பிடுவதன் மூலம் கிடைப்பதாகும். ஆம், யோசுவாவின் காலத்தில் வாழ்ந்த பக்தியுணர்வு கொண்ட இஸ்ரவேலரையும், முதல் நூற்றாண்டுக் காலத்தில் வாழ்ந்த விசுவாச உறுதிகொண்ட கிறிஸ்தவர்களையும் நாம் ஒரு வகையில் ஒப்பிடமுடியும். இரட்சிப்பு என்ற பொருளையுடைய யோசுவாவுக்குப் பின் உயிரோடிருந்த மூப்பர்களுடைய சகல நாட்களிலும், இஸ்ரவேலர் எப்படி கர்த்தரை சேவித்தார்களோ அதுபோலவே, இரட்சிப்பு என்ற பொருளையுடைய இயேசுவுக்குப் பின் வாழ்ந்த அப்போஸ்தலர்களுடைய காலத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள், தங்களுடைய விசுவாச விஷயத்தில், ஒரு சிறப்பான இடத்திலேயே இருந்தனர். அக்கால கட்டத்தில், இஸ்ரவேலுக்குள் அவ்வப்பொழுது, விக்கிரக வணக்கத்தில் ஈடுபாடும், அதனடிப்படையில் சில சில்லறைச் சம்பவங்களும் ஏற்பட்டது போல, முதல் நூற்றாண்டுக் காலத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுடைய விசுவாச வாழ்க்கையிலும் ஆங்காங்கே, சோதனைகளும் பின் மாற்றங்களும் இருக்கவே செய்தது. இருப்பினும், ஒட்டுமொத்த நிலைமை நன்றாகவே இருந்தது.

அப்படியானால் தவறு எங்கே நிகழ்ந்தது? அழிவை ஏற்படுத்தும் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளதே, அது எப்படி? யோசுவாவின் காலத்து ஜனங்கள், ஒருவேளை மோசேயின் பிரமாணம் முழுமையையும் கைக்கொண்டோமென்று சொன்னாலும் கூட, குறிப்பிட்ட ஒரு கட்டளையை அவர்கள் பின்னுக்குத் தள்ளியதாகவே தோன்றுகிறது. "இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்திலிருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்கு கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிற போதும், அவைகளைக் குறித்துப் பேசு......"(உபா.6:6,7) என்று மோசேயின்

பிரமாணம் சொல்லுகிறது. இக்கட்டளைக்கு அந்த ஜனம் முழுமையாகக் கீழ்ப்படிந்ததுபோல் தெரியவில்லை. ஏனெனில், " பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து. அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்" (நீதி.22:6) என்று வேத வசனம் கூறுகிறது. வழிவழியாக இந்தக் காரியத்தை, தேவஜனம் செய்திருந்தால், இப்பெருந்தீமையைத் தவிர்த்திருக்க முடியும்! ஆக, முக்கியமான தேவ கட்டளை புறக்கணிக்கப்பட்டதால், அதாவது உபதேசிக்க வேண்டியதை உபதேசிக்காததால் பக்தி நிலையில் மாற்றம் ஏற்பட்டு, சிறிது சிறிதாக விலகி, ஒரு கட்டத்தில் முற்றிலும் அழிந்து போனார்கள்.

அது போலவே, முதல் நூற்றாண்டுக் காலத்தின் பிற்பகுதியையும், குறிப்பாக அதன் பிறகு வந்த காலங்களையும் கவனித்துப் பார்த்தால், அங்கும் உபதேசம்தான், சீஷர்களின்-கிறிஸ்தவர்களின் பக்தி நிலையில் ஏற்பட்ட மாற்றத்திற்கு - பின் மாற்றத்திற்குக் காரணமாகிவிட்டது. ஆனால், வித்தியாசம் யாதெனில், அங்கே உபதேசம் இல்லாமல் தேவ ஜனம் கெட்டு சரீரப்பிரகாரமாக அழிந்தது. இங்கே உபதேசங்களால், அதாவது கள்ள உபதேசங்களால் தேவஜனம் வழிவிலகிப்போனது. ஆகவே, ".... சகோதரரே, உங்கள் அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்....." என்று எச்சரிக்க வேண்டியதாயிற்று. (2.பேதுரு 1:10). இன்னும், "....கிறிஸ்து வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே?...." (2.பேது.3:10) என்று சொல்லுமளவு கூட நிலைமை போயிருக்கிறதென்றால், கள்ள உபதேசம், உபதேசிக்க வேண்டாத உபதேசம் எந்தளவு கோலோச்சியுள்ளது என்று பாருங்கள்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே! தேவனுடைய பிள்ளைகளின் வாழ்வில் உபதேத்தின் தாக்கம் எந்தளவு உள்ளது என்று கவனியுங்கள். சரீரத்திலும், ஆன்மீகத்திலும் அழிவை ஏற்படுத்தும் வல்லமை உபதேசத்திற்கு இருக்கிறபடியால், நம்முடைய வாழ்க்கையில், உபதேசத்திற்கு - வேத வசனங்களின் உபதேசத்திற்கு நாம் எந்தளவு முக்கியத்துவம் தருகிறோம்? அப்போஸ்தலன் பவுல், தான் விசுவாசத்தில் பெற்றெடுத்த உத்தம குமாரர்களாகிய தீமோத்தேயுவுக்கும், தீத்துவுக்கும் எழுதின நிருபங்களில், "உபதேசம் பற்றியும், ஆரோக்கியமான உபதேசம் பற்றியும்" அநேக முறை வலியுறுத்திக் கூறுகிறாரே, அது ஏன்? (1 தீமோ.1:11. 2.தீமோ.4:3,. தீத்து.1:9,2:1) உபதேசத்தில் விழிப்புணர்வு இல்லாமலிருப்பது ஒருவனுடைய ஆன்மீகத்தை அழிக்கக் கூடும் என்பதால்தானே!

ஆகையால், அருமையான வாசகரே, நாம் ஒவ்வொருவரும் யோசுவாவின் காலத்தில் வாழ்ந்த தேவ ஜனங்களைப் போலவும், முதல் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் போலவும் கர்த்தருடைய உபதேசத்திற்கடுத்த காரியங்களில் உண்மையும், செம்மையுமாயிருந்து, சரீர வாழ்வுக்கான பாதுகாப்பையும் ஆன்ம வாழ்வுக்கான பாதுகாப்பையும் பெற்றுக்

கொள்வோமாக! ஏனைய காரியங்களில் நாம் மாற்றத்தை தேடினாலும், தேவ காரியத்தில் எப்பொழுதும் நிலைத்த தன்மையுடையவர்களாக இருப்போமாக!.

## II ஆகாபின் நாட்களும் – நமது நாட்களும்

மாற்றம் தரும் இரண்டாவது பாடம். ஆகாபின் நாட்களையும், நமது நாட்களையும் ஒப்பிடுவதன் மூலம் கிடைப்பதாகும்.

ஆகாப் ராஜாவின் நாட்களில், தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்லிக்கொள்ளுகிற மக்களின். ஆன்மீகச் சீரழிவு உச்ச கட்டத்திற்குப் போய்விட்டது. ஆம். தேவனுடைய மனிதாகிய எலியா, ஜனங்களைக் கூடிவரச் செய்து, ".... கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள் பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் ...." (I இராஜா. 18:21)என்று சொன்னபோது, ஜனங்கள் பேசாமலிருந்தார்கள். அதாவது, உண்மைக்கும், பொய்க்கும் வேறுபாடு காணமுடியாத ஒரு அவல நிலைக்கு அவர்கள் சென்றுவிட்டார்கள். மெய்யான தேவனை விட்டு, விக்கிரகங்களின் பின் சென்றதால், அவர்களுக்கு இந்தக் கதி ஏற்பட்டது. பக்தி நிலையில் ஏற்பட்ட மாற்றத்தால், முடிவெடுப்பதில் தடுமாற்றம் பெருமளவில் வந்தது.

ஆகாபின் நாட்களில் இருந்த அதே நிலைதான் இன்று நம்முடைய நாட்களில் இருக்கிறதோ என்று எண்ணுமளவு தான் காரியங்கள் உள்ளது. எப்படி உண்மையான தேவனுக்கும், பொய்யான தெய்வங்களுக்கும் வித்தியாசம் தெரியாமல் ஜனங்கள் தடுமாறினார்களோ அதுபோலவே, மெய்யான தேவனால் கட்டப்பட்ட ஒன்றான மெய் சபைக்கும், பிசாசின் விபரீத எண்ணங்களால் விளைந்த பொய்யான சபைகளுக்கும், வேறுபாடு காணமுடியாமல், கிறிஸ்தவம் தடுமாறுகிறது. இந்த நிலைக்கு காரணம் என்ன? ஆகாபின் நாட்களில் மெய்யான தேவனை விட்டு விலகி, விக்கிரகங்களுக்கு அடிபணிந்ததால், அவர்களுடைய ஒட்டு மொத்த ஆன்மீக வாழ்வில் தள்ளாட்டம் ஏற்பட்டது. நமது நாட்களில் மெய்யான சபையை விட்டு விலகியதால் கிறிஸ்தவ சமுதாயத்தின் ஆன்மீக வாழ்வில் ஒரு தள்ளாட்டம் காணப்படுகிறது.

உண்மையில், வேதாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ள கிறிஸ்தவத்திற்கும், இன்றைக்கு நடைமுறையில் உள்ள கிறிஸ்தவத்திற்கும் எந்த சம்பந்தமுமில்லையென்ற நிலைதான் காணப்படுகிறது. இயேசுகிறிஸ்துவால் கட்டப்பட்ட ஒன்றான மெய்ச்சபையாகிய கிறிஸ்துவின் சபை ஆரம்பிக்கப்பட்ட நாட்களில், கிறிஸ்தவர்களுக்குள்ளாக இருந்த மேலான குணங்கள் இன்று கிறிஸ்தவர்களிடையே இல்லை. அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் நாம் பார்க்கும்போது, விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்தார்களென்றும், ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்தில் அனுதினமும் தரித்திருந்தார்களென்றும் உள்ளது. (அப். 2:44,46). ஆனால், இன்று, தேவனைப் பின் பற்றுகிறோம் என்று சொல்லிக்கொள்பவர்களிடம் ஒருமித்தலும், ஒருமனமும்

உள்ளதா? சொல்லுங்கள்? வேதாகம கிறிஸ்தவர்களுக்கும், இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்திற்குமிடையே ஒரு பெரிய இடைவெளி காணப்படுகிறதே அது, எதனால்? இந்த மாற்றத்திற்கு என்ன காரணம் ? சொல்லுங்கள்.

எப்படி, "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்" (யாத்.20:3) என்று மோசேயைக் கொண்டு சொல்லப்பட்ட தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் அந்நிய ஜனங்களின் விக்கிரகங்களைப் பின்பற்றி ஒரு சீரழிந்த நிலைக்கு இஸ்ரவேலர் சென்றார்களோ, அதே போன்ற வெளிப்படையான காரணம் தான் இங்கும். " இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்" (மத்.16:18) என்று ஒருமையில் இயேசு செய்த வாக்குத்தத்தத்தை மறந்து, இன்னும் அப்போஸ்தலன் பவுலைக் கொண்டு, "ஒரே சரீரம்" (ஒரே சபை) (எபே.4:4) என்று பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தினதையும் கண்டுகொள்ளாமல், மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட சபைகளில் தங்களை இணைத்துக்கொண்டு , ஆவிக்குரிய ரீதியில் சீரழிந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இயேசு கட்டின அந்த ஒரே ராஜ்ஜியமாகிய சபையில் யாரெல்லாம் அங்கமாக இருக்கிறார்களோ, அவர்கள் மாத்திரமே பரலோக பாக்கியம் பெறமுடியும். (1.கொரி.15:24)

ஆகையால், அருமையான தேவனுடைய பிள்ளைகளே. தேவனைப் பின்பற்ற விரும்பும் ஒரு மனிதனின் வாழ்க்கையில் எது மாற்றத்தை ஏற்படுத்த முடியுமென்று பார்த்தோம். ஜென்மீக வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள், ஒருவேளை, இவ்வாழ்க்கையை ஏதாவதொருவகையில் பாதித்தாலும், அதன் விளைவு பூமியோடு முடிந்து போகக் கூடியது. ஆனால், ஆன்மீக வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள், இப்பூமியைக் கடந்து, நித்தியம் வரை வரக்கூடியது. தேவனிடமிருந்து நம்மை என்றென்றும் பிரிக்கக் கூடியது. ஆகவே நாம் தேவனுக்கடுத்த, சபைக்கடுத்த காரியங்களில் உபதேசங்களின்படி மாத்திரம் செய்வது அவசியம்.

இஸ்ரவேல் ஜனங்களின் ஆன்மீக வாழ்வில் ஏற்பட்ட மாற்றம் வடக்கு ராஜ்ஜியத்தின் ஜனங்களை கி.பி. 722-உடன் தேவனிடத்திலிருந்து நிரந்தரமாகப் பிரித்து விட்டது. ஒருவேளை நாமும் "ஆன்மீக காரியங்களில்" மாற்றம் விரும்பிகளாக இருப்போமானால், கிறிஸ்துவின் வருகையின் நாளிலிருந்து அல்லது நியாயத் தீர்ப்பின் நாளிலிருந்து அவரிடமிருந்து என்றென்றும் பிரிக்கப்பட்டுவிடுவோம் எனவே, ஆவிக்குரிய காரியங்களில், வேதவசனங்களுக்கு மாறான, மாற்றம் விரும்புகிற மக்களாக நாம் இராமலிருக்க பரலோகத்தின் தேவன் நமக்கு உதவி செய்வாராக.

**S. ராஜநாயகம்**

# உலக வீடியோ வேதாகமக் கல்லூரி
## *மாணவர் சேர்க்கை அறிவிப்பு*

வேதாகம முழுநேரப் பயிற்சிக்கு தங்களை அர்ப்பணிக்க வாஞ்சையுள்ள வாலிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| காலம் | : | 3 வருடம் (செமஸ்டர் முறை) |
| கல்வித்தகுதி | : | +2 தேர்ச்சி (அல்லது). பட்டப்படிப்பு (திருமணமாகாத ஆண்கள் மட்டும்) |
| பட்டம் | : | பி.பி.எஸ் (Bacheler of Biblical Studies) |
| தனித்தன்மை | : | இந்தியாவின் ஒரே வீடியோ வேதாகமக் கல்லூரி |
| ஆசிரியர்கள் | : | உலகெங்கிலும் பெயர் பெற்ற, தேவனுக்கென்று தங்களை அர்ப்பணித்த தேவதாசர்கள் (அமெரிக்கா) |
| போதிக்கும் முறை | : | வீடியோ மூலம் மொழி பெயர்ப்புடன் போதிக்கப்படுகிறது. |

**தகுதியுள்ளவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும்.**

***மேலும் விபரங்கட்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:***

இயக்குநர்
**உலக வீடியோ வேதாகமக் கல்லூரி**
தாராபுரம் ரோடு,
காங்கயம் - 638 701.
இந்தியா
தொலைபேசி : (04257) 20030

# ஊழியர்களைத் தாங்குவதெப்படி?

கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களை வாழ்த்துகிறேன். உங்களோடு கூட தேவனுடைய வார்த்தையை கற்றுக்கொள்ளும்படியாக இந்தக் கட்டுரையின் வாயிலாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். நாம் இதைச் செய்யும்படியாக ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம், என்பதையும் அதன் மிகப் பெரிய பொறுப்பையும் நீங்கள் அறிவீர்கள் என நான் நம்புகிறேன்.

இந்த தொடர்கட்டுரைகளின் பொதுவான நோக்கம் என்னவெனில், "நீங்கள் இருக்கும் இடத்தில் கிறிஸ்துவின் சபையைத் தொடங்குவது எப்படி?" கர்த்தரின் சபையில் அங்கத்தினர்களை உருவாக்குவது எப்படி என்பதைக் குறித்து நாம் ஆலோசிக்கிறோம். இது என்னுடைய சபையோ அல்லது வேறு எந்த மனிதனுடைய சபையோ அல்ல. ஒரு பிரிவினை சபையோ அல்லது மனிதனால் உண்டாக்கப்பட்ட சபையோ அல்ல, ஆனால், இது கிறிஸ்துவுக்கு சொந்தமான சபை. கர்த்தர் தாம் இரட்சிக்கிற யாவரையும் தமது சபையிலே சேர்த்துக்கொண்டு வருகிறார். நீங்கள் இரட்சிக்கப்பட்டு, கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராயிருந்தால், நீங்கள் இருக்கும் இடத்தில், சபையைத் தொடங்க முற்படலாம். அதாவது, அங்கு சபை இல்லாதிருந்தால் நீங்கள் தொடங்கலாம். நீங்கள் அங்கத்தினராய் இல்லையென்றால் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, அவரை விசுவாசித்து, பாவத்திலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவில் உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுவதின் மூலம் அவருடைய சபையின் அங்கத்தினராகலாம். "பின்பு, அவர் அவர்களை நோக்கி; நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு. 16:15,16) என்றும் மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன். (மத்.10:32) என்றும் சொல்கிறார். பேதுரு அவர்களை நோக்கி, நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள். (அப்.2:38) என்றான்.

இந்தக் கட்டுரையில் ஊழியர்களை தாங்குவதெப்படி? என்பதைக் குறித்து நாம் கற்றுக்கொள்ளலாம். உதாரணமாக, நீங்கள் இருக்கும் இடத்தில் ஒரு சபையை தொடங்குவீர்களானால், சிறிது காலத்தில் நீங்கள் உங்கள் பிராந்திய சபையின்

ஊழியரை தாங்கக்கூடிய நிலையை எதிர்நோக்குவீர்கள். அந்த சமயத்தில் நீங்கள் செய்யவேண்டியதென்ன? அதைக்குறித்துதான் நாம் இப்பொழுது பார்க்கவிருக்கிறோம்.

கொரிந்து சபையின் கிறிஸ்தவர்களுக்கு பவுல் எழுதும்போது, “நான் அப்போஸ்தலனல்லவா? நான் சுயாதீனனல்லவா? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நான் தரிசிக்கவில்லையா? கர்த்தருக்குள் நீங்கள் என் கிரியையாயிருக்கிறீர்களல்லவா? நான் மற்றவர்களுக்கு அப்போஸ் தலனாயிராவிட்டாலும், உங்களுக்கல்லவோ அப்போஸ்தலனாயிருக்கிறேன்; கர்த்தருக்குள் நீங்கள் என் அப்போஸ்தல ஊழியத்திற்கு முத்திரையா யிருக்கிறீர்களே. என்னை நியாயம் விசாரிக்கிறவர்களுக்கு நான் சொல்லுகிற மாறுத்தரமாவது; புசிக்கவும் குடிக்கவும் எங்களுக்கு அதிகாரமில்லையா? மற்ற அப்போஸ்தலரும், கர்த்தருடைய சகோதரரும், கேபாவும் செய்கிறதுபோல, மனைவியாகிய ஒரு சகோதரியைக் கூட்டிக்கொண்டு திரிய எங்களுக்கும் அதிகாரமில்லையா? அல்லது, கைத்தொழில் செய்யாதிருக்கிறதற்கு எனக்கும் பர்னபாவுக்கும்மாத்திரந்தானா அதிகாரமில்லை? எவன் தன்சொந்தப்பணத்தைச் செலவழித்து, தண்டிலே சேவகம்பண்ணுவான்? எவன் மந்தையை மேய்த்து, அதின் பாலைச் சாப்பிடாதிருப்பான்?. இவைகளை மனுஷர் வழக்கத்தின்படி சொல்லுகிறேனோ? நியாயப்பிரமாணமும் இவைகளைச் சொல்லுகிறதில்லையா?. போரடிக்கிற மாட்டை வாய் கட்டாயாக என்று மோசேயின் பிரமாணத்திலே எழுதியிருக்கிறதே. தேவன் மாடுகளுக்காகவே கவலையாயிருக்கிறாரோ? நமக்காகத்தான் இதைச் சொல்லுகிறாரோ? உழுகிறவன் நம்பிக்கையோடே உழவும், போரடிக்கிறவன் தான் நம்புகிறதில் பங்கடைவேன் என்கிற நம்பிக்கையோடே போரடிக்கவும் வேண்டியதே, ஆகையால், அது நமக்காகவே எழுதியிருக்கிறது. நாங்கள் உங்களுக்கு ஞானநன்மைகளை விதைத்திருக்க, உங்கள் சரீரநன்மைகளை அறுத்தால் அது பெரிய காரியமா?. மற்றவர்கள் உங்களிடத்திலே இந்த அதிகாரத்தைச் செலுத்தினால், அவர்களிலும் நாங்கள் அதிகமாய்ச் செலுத்தலாமல்லவா? அப்படியிருந்தும், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு யாதொரு தடையும் உண்டாகாதபடிக்கு, நாங்கள் இந்த அதிகாரத்தைச் செலுத்தாமல் எல்லாப் பாடும் பாடுகிறோம். ஆசாரிய ஊழியஞ்செய்கிறவர்கள் தேவாலயத்திற்குரியவைகளில் புசிக்கிறார்களென்றும், பலிபீடத்தை அடுத்துப் பணிவிடை செய்கிறவர்களுக்குப் பலிபீடத்திலுள்ளவைகளில் பங்கு உண்டென்றும் அறியீர்களா?. அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார். அப்படியிருந்தும், நான் இவைகளில் ஒன்றையும் அநுபவிக்கவில்லை; இப்படி எனக்கு நடக்கவேண்டுமென்று இவைகளை நான் எழுதுகிறதுமில்லை. என் மேன்மை

பாராட்டலை ஒருவன் அவத்தமாக்குகிறதைப்பார்க்கிலும் சாகிறது எனக்கு நலமாயிருக்கும். சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை. அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ. நான் உற்சாகமாய் அப்படிச் செய்தால் எனக்கு பலன் உண்டு; உற்சாகமில்லாதவனாய்ச் செய்தாலும், உக்கிராண உத்தியோகம் எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதே. ஆதலால் எனக்குப் பலன் என்ன? நான் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கையில் அதைப்பற்றி எனக்கு உண்டாயிருக்கிற அதிகாரத்தை முற்றிலும் செலுத்தாமல், கிறிஸ்துவின் சுவிசேஷத்தை செலவில்லாமல் ஸ்தாபிப்பதே எனக்கு பலன். (1.கொரி.9:-1-18).

இதில், பவுல் தான் அப்போஸ்தலனாய் இருப்பதாலும், கர்த்தருடைய ஊழியக்காரனாய் இருப்பதாலும் தனக்குள்ள சுயாதீனத்தை வெளிப்படுத்துகிறார். சுவிசேஷத்தை பிரசங்கிப்பதற்காக சகோதரரிடமிருந்து உதவியைப் பெற்றிருக்கலாம், ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. அந்தச் சூழ்நிலையில் அவர் அதை சிறந்ததாகக் கருதவில்லை. இருந்தாலும், மற்ற சமயங்களில் அவர் சகோதரரிடமிருந்து உதவியை ஏற்றுக்கொண்டார். பிலிப்பு பட்டணத்திலுள்ள கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது, “மேலும், பிலிப்பியரே, சுவிசேஷத்தின் ஆரம்பத்திலே நான் மக்கெதோனியாவிலிருந்து புறப்பட்டபோது, கொடுக்கல், வாங்கல் காரியத்தில் நீங்கள் மாத்திரம் எனக்கு உடன்பட்டதேயல்லாமல், வேறொரு சபையும் உடன்படவில்லை என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். நான் தெசலோனிக் கேயிலிருந்தபோதும், என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் இரண்டொருதரம் அனுப்பினீர்கள். உபகாரத்தை நான் நாடாமல், உங்கள் கணக்குக்குப் பலன் பெருகும்படியே நாடுகிறேன். எல்லாம் எனக்கு கிடைத்தது. பரிபூரணமும் உண்டாயிருக்கிறது; உங்களால் அனுப்பப்பட்டவைகளைச் சுகந்த வாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக எப்பாப்பிரோதீத்துவின் கையில் வரப்பற்றிக்கொண்டபடியால் நான் திருப்தியடைந்திருக்கிறேன். (பிலிப்பியர்.4:15-18). என்றான்.

பவுல், ஒரு கூலியாளுக்கு அவனுடைய கூலியை தருவது மிகவும் நியாயமானது என்று காட்டுகிறார். மேலும், அவர் விவசாயி, திராட்சத்தோட்டக்காரர், மேய்ப்பர் ஆகியோர் தனது விளைச்சலின் மூலம் எவ்வாறு ஜீவனம் செய்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டி விளக்கமளித்திருக்கிறார். மேலும் அவர், ஆசாரியர்கள், பலிபீடத்திற்கு கொண்டுவரப்படும் பலிகளில் எவ்வாறு பங்கேற்றனர் என்பதையும் காட்டுகிறார். பிறகு சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டும் என்று முடிவுரை கூறுகிறார்: அதாவது, ஊழியரை அவருடைய ஊழியத்தில் தாங்கவேண்டும்.

வேறொரு சமயத்தில், பவுல் எழுதுகிறதாவது, “போரடிக்கிற மாட்டை

வாய்க்கட்டாயாக என்றும். வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றும் வேதவாக்கியம் சொல்லுகிறதே. "(1.தீமோ. 5:18). இதில், கர்த்தருடைய ஊழியத்திற்குத் தன்னை முழுமையாய் ஒப்புக்கொடுத்த மூப்பர்கள் இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராகிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்டுகிறார்,"நன்றாய் விசாரணைசெய்கிற மூப்பர்களை, விசேஷமாகத் திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பானகனத்திற்கு பாத்திரராக எண்ணவேண்டும்" (1.தீமோ.5:17).

எனவே, கர்த்தருக்கென்று பணிசெய்பவர்களை தாங்குவதற்கு வேதாகமம் அதிகாரம் அளித்துள்ளது என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. அந்த பணி செலவில்லாமல் செய்யக்கூடியது தான், இருந்தாலும், பணிசெய்கிறவர், மற்றவைகளின் மூலம் உதவியை பெறலாம். ஆனால், கர்த்தருடைய பணியில் முழுமையாக தன்னை ஒப்புக்கொடுத்தவர், அந்த சபையின் உதவியைப் பெறுவதிலோ, அல்லது சபையில் பகுதி நேர ஊழியம் செய்பவர் கூட, பகுதி நேர உதவியை பெறுவதிலோ நிச்சயமாக எந்த தவறும் இல்லை.

எப்பொழுதும் போல, இன்றைக்கும் சம்பளத்திற்கு வேலையாட்க ள் உண்டு என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இவர்கள், விசுவாசத்தினாலோ அல்லது கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டுமென்ற வாஞ்சையினாலோ அதைச் செய்யாமல், சம்பளத்திற்காக மாத்திரமே அதைச் செய்கிறார்கள். இவர்களது, ஊழியத்தைப் பெற என்னென்ன பிரசங்கிக்கவேண்டுமோ அதையெல்லாம் பிரசங்கிப்பார்கள். இயேசு அவர்களை இவ்வாறு விவரிக்கிறார். "மேய்ப்பனாயிராதவனும், ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாதவனுமான கூலியாள் ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளை விட்டு ஓடிப்போகிறான்; அப்பொழுது ஓநாய் ஆடுகளைப்பீறி, அவைகளைச் சிதறடிக்கும், கூலியாள் கூலிக்காக வேலைசெய்கிறவனாகையால் ஓடிப்போகிறான், ஆடுகளுக்காக அவன் கவலைப்படான். (யோவா.10:12,13). அதாவது, வேலையாள் உண்மையும் உத்தமுமானவனல்ல. அவன் தன் வேலையை நம்புகிறதில்லை. அவன் பணத்திற்காக மாத்திரமே வேலை செய்கிறானேயன்றி, கர்த்தருக்காக அல்ல. இவ்விதமான ஊழியரின் நிமித்தம் எச்சரிக்கையாயிருப்பது அந்தந்த பிராந்திய சபையைப் பொறுத்ததாகும். அவர் எப்படிப்பட்டவர் என்பது வெகுசீக்கிரம் தெரிந்துவிடும். என்றாலும், அதற்குள்ளாக அநேக ஆபத்துகள் நிகழ்ந்துவிடலாம்.

இப்பொழுது, நீங்கள் இருக்கும் இடத்தில், ஒரு ஊழியரைத் தாங்குவதைக் குறித்து சிந்தித்துக்கொண்டிருப்பீர்களானால், எவ்வாறு அவரை தேர்ந்தெடுக்கப் போகிறீர்கள்? அவர் சபையில் ஒருவராகவும் இருக்கலாம் அல்லது நாட்டின் வேறு பகுதியிலிருந்து வந்தவராகவும் இருக்கலாம். முதலில், பகுதிநேர ஊழியரைத் தாங்கப்போகிறீர்களா அல்லது முழுநேர ஊழியரைத் தாங்கப்போகிறீர்களா? அதாவது, பகுதிநேர உதவியைத் தரப்போகிறீர்களா? அல்லது முழுமையான உதவியைத் தரப்போகிறீர்களா? அடுத்ததாக, மாதாந்திர உதவியாக எவ்வளவுத் தர இயலும், உங்களிடம் போதுமான அளவு

இல்லையென்றால், உங்களைச் சேர்ந்த சபையோ அல்லது சபையாரோ சிறிதுகாலம் உங்களுக்கு உதவலாம்.

உங்களுக்குத் தேவை ஒரு இளம் ஊழியரா அல்லது மூத்த ஊழியரா? உங்களுக்கு தேவை ஒரு தனிமனிதனா அல்லது குடும்பஸ்தரா? உங்களுக்கு அனுபவமிக்கோர் தேவையா? எவ்வளவு கால அனுபவம்? அவர் எங்கே வாழ்ந்தவர் என்ன தொழில் செய்துகொண்டிருந்தவர் என்பதை கருத்தில் கொள்வது மிகவும் நன்று. அவர் ஒரு விசுவாசமுள்ள கிறிஸ்தவரா? தனது கடமைகளை சரிவர செய்துமுடிப்பவரா? அவர் ஒரு நல்ல, நேர்மையான மனிதரா?. அவரைத் தேர்வு செய்யும் முன். அவரது பிரசங்கத்தை சிறிது கேட்பது நல்லது. எப்படிப்பட்ட ஊழியர் அவர்? அவரால் மக்களோடு சேர்ந்து செயல்பட முடியுமா? அவர் அறிவுரைகளை ஏற்றுக்கொள்பவரா. அவர் கிறிஸ்துவினிடம் மக்களைக் கொண்டுவர அவரால் முடியுமா? அவர் ஒரு தலைவரா?

எந்த மட்டும் அவர் கொள்கைகளில் பற்றுடையவராயும் முற்றிலும் அதின்படி நடப்பவராயும் இருக்கிறார். பல்வேறு கொள்கை வெளிப்பாடுகளில் அவர் எப்படி இருக்கிறார் என்பதை நீங்கள் அறிந்து கொள்வது அவசியம்.

அவருக்கும் அவரது குடும்பத்திற்கும் எவ்வளவு உதவித் தேவைப்படும்? உங்களால் அவ்வளவு தரமுடியாவிட்டால் நீங்கள் அவரை அழைக்க இயலாது. உங்களால் அவரைத் தாங்க முடியுமானால், வேதாகமம் போதிக்கிறதுபோல அவர் உங்களது எதிர்பார்ப்புக்கேற்றவராய் இருப்பாரானால், நீங்கள் அந்த பணியைத் தொடரலாம்.

சில யாதார்த்தமான விஷயங்களைக் கற்றுக்கொண்டோம், அது உங்கள் பிராந்தியசபைக்கு உதவியாயிருக்குமென நம்புகிறேன். மற்ற காரியங்களைத் தொடர்ந்து அடுத்தமாதம் பார்ப்போம்.

**J.C.Choate**

**J.C.சோட்**

## கர்த்தருடைய வார்த்தையின் நன்மைகள்

**(சங்கீதம் 119 லிருந்து.....)**

1. நமது வழிகளை சுத்தப்படுத்துகிறது (9,101)
2. பாவம் செய்யாதபடி நம்மைக் காக்கிறது (11, 101)
3. ஊக்கப்படுத்துகிறது (14,16,25,28,35,70,77,92,93,149)
4. தேவ பயத்தை தருகிறது (38)
5. நம்பிக்கை அளிக்கிறது (43,49–50,74,81,114,147)
6. நன்றியுணர்வை தருகிறது. (62)
7. ஞானத்தை கொடுக்கிறது (98,100,104)
8. வழி நடத்துகிறது (24,105,130,155)
9. ஜீவனளிக்கறது(25,37,40,88,107,149,159)

# "கிறிஸ்துவாகிய இயேசு"

மதிய நேர உறக்கத்தில் இருந்த தீமோத்தேயுவை தட்டிக்கொடுத்த வண்ணம் ரேச்சல் மிகவும் மென்மையாக பாடிக்கொண்டிருந்தாள். "எவ்வளவு சீக்கிரம் இவன் வளர்ந்துகொண்டுள்ளான் என ரேச்சல் நினைக்கலானாள்" "இன்னும் சில நாட்களுக்குள்ளே அவனுடைய முதல்வருட பிறந்தநாளைக் கொண்டாட இருக்கிறோம். கடந்த வருடத்தில் நம்முடைய வாழ்க்கை எவ்வளவு தூரம் மாறிவிட்டது.

அவள் அமைதியாக தன்னுடைய வேதாகமத்தை திறந்து பிலிப்பியர் நிருபத்தை வாசிக்கத் துவங்கினாள். தன் சக கிறிஸ்தவர்களுக்காகச் செலுத்த வேண்டிய அன்பைக் குறித்து பவுல் எழுதிய வாக்கியம் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. "சுவிசேஷம் உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நாள் முதல் இதுவரைக்கும் நீங்கள் அதற்கு உடன்பட்டவர்களானபடியால் நான் பண்ணுகிற ஒவ்வொரு விண்ணப்பத்திலும் உங்கள் அனைவருக்காகவும் எப்போதும் சந்தோஷத்தோடே விண்ணப்பம்பண்ணி" (பிலி.1:3,4). அவளும் கூட அதே உணர்வும், எண்ணமும் உடையவளாக அந்த இளம் சகோதர, சகோதரிகளிடம் இருந்திருக்கிறாள். "நான் ஆச்சரியபபடுகிறேன்" அவள் சத்தமாக கூறிவிட்டு, "எத்தனை சகோதர, சகோதரிகள் இந்த உலகத்தில் எங்கெல்லாமோ வாழ்கிறார்கள் அல்லவா? வேதாகமத்தை மற்றும் பின்பற்றி வாழும் அநேக மக்கள் இருக்கவே வேண்டும்! கட்டாயமாக ஒரு நாளைக்கு அவர்களையெல்லாம் கண்டு பிடிக்கலாம்".

தொடர்ந்து வாசித்துக்கொண்டே, ரேச்சல் 2ம் அதிகாரத்தின் 5ம் வசனத்திற்கு வந்தாள். "கிறிஸ்து இயேசுவிலிருத சிந்தையே உங்களிலும் இருக்ககடவது. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். அவர் மனுஷ ரூபமாய் காணப்பட்டு, மரணபரியந்தம் அதாவது, சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழுங்கால் யாவும் முடங்கும்படிக்கும் பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுக் கிறிஸ்து கர்த்தர் என்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். (பிலி 2:5-11).

“எவ்வளவு ஒரு அருமையான பகுதியென ரேச்சல் எண்ணினாள். கிறிஸ்து எப்போதும் தேவனுடைய குமாரன் என்றும், உலகப்பிரகாரமான ஒரு பிள்ளை எப்படி தன் தந்தைக்கு கீழ்ப்படிந்திருக்கிறதோ அதைப்போல, இவரும் தேவனுக்கு கீழ்ப்படிந்திருந்தார் என்று நான் நினைத்திருந்தேன். ஆனால் இந்த வசனம் தேவனுக்கு சமமாக இருந்து தன்னை வெறுமையாக்கி பிறகு கீழ்ப்படிந்தார் என்று போதிக்கிறது. நான் இதைப் பற்றி ஆண்ட்ரூவிடம் கேட்க வேண்டும்.

அன்றிரவு, ஆண்ட்ரூ வீட்டிற்குள் வரும்போது ரேச்சல் அவசரமாக சமையல் கட்டிலிருந்து மிகவேகமாக அவனை வாழ்த்த வருகிறாள். “நான் மிக உத்வேகத்துடன் இருக்கிறேன் ஆண்ட்ரூ” என அவள் கூறினாள். “நான் இன்று வாசித்த வசனப்பகுதியானது பல எண்ணங்களையும் கேள்விகளையும் எழுப்புகிறது. நாம் திட்டமிட்டபடி வாசிக்கவேண்டிய பகுதியை தள்ளிவைத்துவிட்டு அதற்குப் பதில் கிறிஸ்துவைப் பற்றிய வசனப் பகுதிகளை பார்க்கலாமா?”

“ம்,சரி” ஆண்ட்ரூ ஆச்சரியமான புன்னகையுடன் பதிலுரைத்தான். “நீ கிறிஸ்துவின் சிறிய வயதிலிருந்து நம்பிக்கை வைத்திருக்கிறாய். புதிதாக என்ன காரியத்தை நீ படிக்க விரும்புகிறாய்?”.

நீங்கள் ஆரம்பத்திலிருந்து இயேசுவை எப்படி கற்பனை செய்து பார்த்தீர்கள்? என்று அவள் கேட்டாள்.

“தேவனுடைய குமாரன்”

ஆனால், நான் இன்று பிலிப்பியர் 2ம் அதிகாரத்தை வாசித்துக்கொண்டிருந்தபோது அங்கே ஆதியிலிருந்தே தேவத்துவத்தில் சமமாக இருந்தனர் என்றும் பிறகு இயேசு கிறிஸ்து தன்னை வெறுமையாக்கி தேவனுக்கு கீழ்ப்படிந்தார் என்பதையும் புரிந்து கொண்டேன். இந்த ஓர் அர்த்தம் எனக்கு இதுவரை தோன்றவில்லை”.

“எனக்கும்கூட” என ஆண்ட்ரூவும் ஒத்துக்கொண்டான். அந்த வசனங்களின் உண்மையான அர்த்தங்களை படிக்கவேண்டுமானால் நாம் ஒத்த வாக்கியத்தை எடுத்து இன்று இரவுக்குள் அதைப் படித்துவிடலாம்.

மாலைவேளைகளையும், இரவு உணவையும் முடித்து, தீமோத்தேயுவை அவன் விளையாடின பிறகு குளிக்கவைத்து இரவு படுக்கைக்கு ஆயத்தம் செய்து ஆண்ட்ரூவும் ரேச்சலும் படிப்பதற்காக உட்கார்ந்தார்கள்.

“ஆண்ட்ரூ நாம் கடந்த நாட்களில் இதே மாதிரி செயல்களை செய்தோம். ஆனால் நம்முடைய இன்றைய அல்லது நாளைய செயல்பாடுகள் இதைப் பற்றி எப்படியிருக்கும்? இப்போது நாம் கிறிஸ்தவர்களாயிருப்பதால் வேலை என்னவோ மாறவில்லையென்றாலும் நம்முடைய குறிக்கோள் மாறியிருக்கிறது. நாம் காரியங்களை பார்க்கும்போது அவை தேவனோடே சம்பந்தப்பட்டதா நம்

வாழ்வில் அவரின் முக்கியத்துவம் இவைகளைப் பற்றி பார்க்கிறோம். இந்த மாற்றங்கள் நம் வாழ்வில் எவ்வளவு வித்தியாசங்களை கொண்டுவந்துவிட்டது!"

சரியாகச் சொன்னாய் ரேச்சல். நாம் இப்பொழுது வாழ்வது "பொருளுக்காகவோ" "இம்மைக்காகவோ" அல்லாமல் மறுமைக்காக வாழ்கிறோம். இப்பொழுது நாம் சிந்திக்கலாம்" என பேப்பரையும், பேனாவையும் எடுத்தவனாக ஆண்ட்ரூ ஆரம்பிக்கிறான். நாம் வாசித்ததில் இன்னொரு வசனப் பகுதியும் அடங்கியிருக்கும். அவை கிறிஸ்து இந்த உலகத்தில் பிறப்பதற்குமுன் உள்ள அவரது உறவுகளை வெளிச்சம் போட்டு காண்பிக்கும்.

"எனக்குத் தெரியும்" என ரேச்சல் அதிசயித்தாள். "மிகவும் பரீட்சையமான ஒன்று. ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்று அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அவருக்குள் ஜீவன் இருந்தது. அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. " (யோவா.1:3-5) ஜீவன் - அது ஒரு வல்லமை, தேவனுக்கு மட்டுமே சொந்தமானது!".

நான் இவைகளையெல்லாம் எழுதுகிறேன்" என்று ஆண்ட்ரூ எழுத ஆரம்பித்தான். அந்த வார்த்தை தேவனோடிருந்தது தேவனாயிருந்தது எல்லாம் அவர் மூலம் உண்டாக்கப்பட்டது.

ரேச்சல் தொடர்ந்து வாசித்தாள். "வசனம் 14 கூறுகிறது அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.

"எபிரேயர்.1:3 அவரைக் குறித்துப் பேசும்பொழுது, அவர் தேவனின் மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமாயிருக்கிறார் என்கிறது. இந்த வசனம் ஆவிக்குரிய தன்மையில் அவர்கள் ஒன்றாயிருக்கிறார்கள்".

"2ம் வசனம் சிருஷ்டிப்பிலே குமாரனுடைய பங்கைக் குறித்து பேசுகிறது மற்றும் அவருடைய வல்லமையின் வார்த்தை சகல காரியங்களையும் தாங்கிப்பிடிக்கிறது என்று 3-ம் வசனம் தெளிவுப்படுத்துகிறது.

"ஆனால் 3ம் வசனத்தை பார், ரேச்சல், இது சங்கீதம் 2:7ல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம், அது இப்படியாய் சொல்கிறது, "நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன்" வார்த்தை, தேவ குமாரனாய் ஆனது காலத்தின் ஒரு குறிப்பிட்ட நேரத்தில்தான் என இந்த வசனம் கூறுகிறது, அவர் ஜெநிரிப்பிக்கப்பட்டதும் காலத்தின் ஒரு குறிப்பிட்ட நேரத்தில்தான். வசனத்தின்

மீதி பகுதி இன்னும் கூடுதலாய் நமக்கு விளக்குகிறது: நான் அவருக்கு பிதாவாயிருப்பேன். அவர் எனக்கு குமாரனாயிருப்பார்" இந்த தீர்க்கதரிசன வசனங்கள் வருங்காலத்தைப் பற்றி குறிப்பிடுகிறது. தீர்க்கதரிசனம் பரிசுத்த ஆவியினாலே அருளப்பட்டபொழுது வார்த்தை குமாரனாயிருக்க வில்லையென்றும், பின்பு அவர் குமாரனாவார் என்றும் இது நமக்குக் காட்டுகிறது.

"பார் 6ம் வசனத்தில் தேவன், முதற்பேரானவரை உலகத்தில் கொண்டு வரும்போது தேவதூதர்களும் பணிவார்கள் என்கிறது. இதற்கும் இயேசு பிறந்தபோது பரலோக தூதர்கள் தோன்றி பணிந்ததற்கும் தொடர்பு இருக்கிறதுதானே?".

"இது அர்த்தமுள்ளமாய் இருக்கிறது" ரேச்சல் ஒத்துக்கொண்டாள், " இது ஒரு பிரமிப்பூட்டும் பாட நேரம்! நம்மை இரட்சிப்பதற்காகச் செய்யப்பட்ட எல்லாக்காரியங்களையும் புரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். நாம் நாளை இரவு தொடர்ந்து இதைப்படிக்கலாமா?

"கண்டிப்பாக!""அதிகம் படித்து தெரிந்து கொள்ளுவதில் எனக்கும் ஒரு தனி ஆர்வமுண்டு" என்று ஆண்ட்ரூ கூறினான்.

**R.R. NAYAGAM** **B.B. CHOATE**


# அருமையான வாய்ப்பு

*பரிசுத்த ஆவியானவரின் பணி* (170 பக்கங்கள்) மற்றும் *புதிய ஏற்பாட்டு ஆராதனை* (112 பக்கங்கள்) ஆகிய நூல்கள் தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும் வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

*புத்தகம் முற்றிலும் இலவசம்* அனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்பவேண்டிய குறைந்தபட்ச தொகை ரூ. 30/-

முகவரி : *தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்*

தபால் பெட்டி எண் 27. காங்கயம் - 638 701.

*குறிப்பு* : *தயவு செய்து* M.O. *மாத்திரம் அனுப்பவும். மணியார்டர் கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதவும்.*

**வாலிபர் பகுதி**

# அரசாங்க உத்தியோகத்தை உதறிய ஆயக்காரன்

தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, மனுஷரூபமாய் சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தின தற்பரன் இயேசுக் கிறிஸ்துவின் மகிமையின் நாமத்தில், அன்பான கட்டளைக்கு கீழ்ப்படிவோமே ஆனால் எங்களை வழிநடத்துபவர்கள் அதிகாரத்தைக் கொண்டு அல்லவா அடிபணியச் செய்ய வேண்டுமென்கிறார்கள் என அங்கலாய்த்துக்கொண்டிருக்கும் வாலிப நெஞ்சங்களுக்கு வாழ்த்துக்கள். இந்த இளம் பருவத்தில், அனுபவத்தால் தங்கள் மனதை பக்குவப்படுத்தியிருக்கும் பெரியோர்க்கு மனப்பூர்வமாய் கீழ்ப்படிந்துக் கற்றுக்கொள்வதே சாலச் சிறந்தது.

எக்காலத்திலும் கனிதரும் மரம் போன்ற வேதாகமத்தில் ஞானக் கனியாம் நீதிமொழிகளில் "என் மகனே நீ செவிகொடுத்து, ஞானமடைந்து, உன் இருதயத்தை நல் வழியிலே நடத்து" (22:17) என்று அநாதி தேவனுடைய ஆலயத்தை எழில் மிகு வடிவில் ஏழரை வருடத்தில் கட்டி முடித்த சாலொமோன் அறிவுறுத்துகிறார். இளைஞராகிய நாம் மூத்தோரின் முதுமொழிக்கு செவிமடுத்து, கீழ்ப்படிவதன் மூலம் ஞானமானது நம்வழிகளை நல் வழிப்படுத்தினால் தேவ ஆசீர்வாதம் பெற்று இம்மையிலும் மறுமையிலும் வாழ்வாங்கு வாழ்வோம் என்பதே அவருடைய சீரிய எண்ணம். அவ்வெண்ணத்தின்படி நாம் வாழ்வதற்கென்று இம்மாதக் கட்டுரையில் ஆண்டவரின் அழைப்பை ஏற்று கீழ்ப்படிந்த அப்போஸ்தலனும், ஆயக்காரனுமாகிய "மத்தேயு" மிளிர்கிறான்.

**ஆண்டவர் அழைத்தபோது கீழ்ப்படிந்தவன்:-**

இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவும் மனுவுருவெடுத்த புதிய ஏற்பாட்டு மத்தியஸ்தராம் அன்பின் ஆண்டவர் இயேசுகிறிஸ்து தம்முடைய காரியங்களுக்கு உறுதுணையாய் இருக்கும்படி பன்னிரண்டு பேரை தேர்ந்தெடுத்தார். யாக்கோபு, யோவான், பேதுரு அந்திரேயா ஆகிய செம்படவர்களை தெரிந்துகொண்டார். லேவி என்கிற மறுபெயர் கொண்ட மத்தேயுவின் அழைப்பைக்குறித்து, மத்தேயு, மாற்கு, லூக்கா, ஆகிய மூன்று ஆசிரியர்களும் எழுதுகிறார்கள். யோவானுடைய புத்தகத்தில் இச்சம்பவம் இடம் பெற்றதாக தெரியவில்லை. (மத்.9:9; மாற்கு. 2:14, லூக்.5:27).

ஆயத்துறையில் அமர்ந்திருந்த மத்தேயுவை "எனக்குப் பின் சென்று வா" என்று மகிமையின் நாதர் இயேசுகிறிஸ்து தம்முடைய பட்டணத்திலிருந்து கடந்து போகையில் அழைத்தார் என்று மத்தேயு 9:9ல் வாசிக்கிறோம். லூக்கா ஆசிரியர் இச்சம்பவத்தை எழுதும்போது, மத்தேயு, மாற்கு ஆகியவர்கள் எழுதியதைவிட ஒருபடி மேலே போய், எல்லாவற்றையும் விட்டு அவன் இயேசுவை பின்தொடர்ந்தான் என மத்தேயுவின் கீழ்ப்படிதலின் மாண்பை விவரிக்கிறார். (லூக். 5:27)

ஆண்டவரின் அழைப்பின் சத்தத்தைக் கேட்ட மத்தேயு, சாக்கு போக்குச் சொல்லாமல் ஆண்டவருடைய சித்தம் தன் வாழ்க்கையில் நிறைவேற தன்னை முழுவதுமாய் ஒப்புக்கொடுத்தான். ஆதி மனுஷனாகிய ஆதாம் தன் வாழ்க்கையில் தேவனுடைய சத்தத்தைக் கேட்டு தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே தான் பாவம் செய்ததினால் ஒளித்துக்கொண்டான். (ஆதி.3:8). பாவத்தின் திகில் அவர்கள் மேல் படர்ந்திருந்ததால் பரமனின் முகம்பார்க்க முடியாமல் பதுங்கிக் கொண்டார்கள். மத்தேயுவுக்கும் ஆதாமுக்கும் உள்ள வித்தியாசத்தை பார்த்தீர்களா? வித்தியாசத்தின் காரணமென்ன? ஒரே வார்த்தையில் சொன்னால் " கீழ்ப்படிதல்" தான்.

மத்தேயு நமக்கு முன் வைக்கும் பாடம் ஆண்டவரின் சத்தத்திற்கு, அவர் சித்தம் செய்ய முழுமையாய் நம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்பதுதான். வாலிபர்களாகிய நீங்கள், இன்று அவருடைய சத்தத்தை நாங்கள் எங்கு கேட்பது என்ற கேள்வியை உடனடியாக கேட்பீர்கள்? விவிலியம் விளக்கம் அளிக்கிறது கேளுங்கள்.

".... எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்" (2.தெச.2:14). ஆகவே இன்று நாம் அவருடைய சுவிசேஷத்திற்கு கீழ்ப் படிகிறவர்களாக இருப்பது அவசியம். கீழ்ப்படியவில்லை என்றால் ஜீவாலித்தெரிகிற அக்கினியோடு வானத்திலிருந்து விண்ணவராகிய இயேசு வெளிப்படும்போது நீதியுள்ள ஆக்கினைக்குட்பட்டவர்களாயிருப்போம். (2.தெச.1:7,8).

மத்தேயு தரும் மற்றொரு பாடம், அழைப்பை ஏற்றுக்கொண்டவ, தன் வீட்டில் இரட்சிப்பின் அதிபதியாகிய இயேசுவுக்கு மாபெரும் விருந்து ஏற்படுத்தினான். அதின் தனிச் சிறப்பு என்னவென்றால் தாம் அடைந்த இரட்சண்யத்தின் சந்தோஷத்தை மற்ற ஆயக்காரரும் பிறரும் அடைய வேண்டும் என்ற உன்னத நோக்கோடு அவர்களையும் இவ்விருந்துக்கு அழைத்தான். (மத்.9:10). வாலிபர்களாகிய நாம் இன்று இயேசு செய்த உன்னத தியாகத்தால் அடைந்திருக்கும் பாவ விமோச்சனத்தை இவ்வுலகிற்கு

பகிர்ந்தளிக்கும் வண்ணமாய் இயேசுவின் சுவிசேஷத்தைக் கொண்டு வசனத்தின் துணையோடு விண்ணுலகத் தந்தையின் விசேஷ மைந்தனாம் இயேசுவண்டை அநேகரை அழைத்து வருவோம்.

**கீழ்ப்படிந்ததின் மூலம் பெருந்தியாகம் செய்தவன்:-**

நீதியின் ஆதவனாம் இயேசு கிறிஸ்து தம் கதிர்களை, அழைப்பின் வடிவில் மத்தேயுவின்மேல் ஒளிரச்செய்தபோது, கதிர்பட்டு கடலில் கண்டெடுத்த முத்துபோல் பிரகாசித்தான் நமது கட்டுரையின் மகுடமாய் திகழும், அப்போஸ்தலனாகிய மத்தேயு. அவன் ஆண்டவர் அழைத்தபோது எல்லாவற்றையும் விட்டு அவர் பின்சென்றான் என அறிகிறோம். இயேசு பன்னிரண்டு சீஷர்களை தேர்ந்தெடுத்தாரே, அவர்களும் இயேசுவானவர் அழைத்தவுடன் வந்தார்களே, இவன் மாத்திரம் என்ன பெருந்தியாகம் செய்தான்? எல்லாரும் செய்ததைத் தான் இவனும் செய்தான்? என்று நினைப்பீர்கள். தொடர்ந்து படியுங்கள். காரணம் புலப்படும்.

ரோம சாம்ராஜ்யம் உலகம் முழுவதும் தமது இரும்புக் கரத்தால் ஆண்டு கொண்டிருந்த நேரமது. மத்தேயு, உலகாளும் ரோம சக்கரவர்த்தியின் அரசாங்கத்தின் வரித்துறையில் வேலை செய்தான். சரி, இயேசு கிறிஸ்து மீனவர்களாகிய பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான் ஆகிய இந்த நாலு பேரையும் அழைத்தபோது அவர்களும் உடனே பின்சென்றார்கள். இவர்களைவிட மத்தேயு, எவ்விதத்தில் தன்னை சமர்ப்பணம் செய்தான் எனக்கேள்வி தொடுக்கிறீர்களா? ஒரு வேளை, இந்த நால்வருக்கும் எதிர்காலத்தை குறித்த கேள்வி எழும்பும்போது, விட்ட தொழிலை மீண்டும் தொடரலாம் என்ற நம்பிக்கை அவர்களைத் திடப்படுத்தும், ஆனால் நமது மத்தேயுவோ அரசுத்துறையை விட்டெழுந்து வந்ததால், ஒருவேளை மீண்டும் ஜீவியத்திற்கு தன்னுடைய உழைப்புத் தேவைப்படும்போது, அரசிடம்போய் கையேந்தமுடியாது. இப்போது மத்தேயு செய்த தியாகம் ஓரளவுக்கு புரிந்திருக்கும் என நம்புகிறேன்.

மத்தேயு செய்த இப் பெருங் காரியத்தின் பலனாக இயேசுவின் இரண்டாம் வருகையில், அவர் மகிமையின் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் போது அவரோடே கூட மத்தேயுவும் மற்ற அப்போஸ்தலர்களும் பன்னிரண்டு சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்து கீழ்ப்படியாத இஸ்ரவேலர்களை நியாயந்தீர்ப்பார்கள். (மத்.19:28) இயேசுவுக்காய் இழந்த அனைத்தையும் நூறத்தனையாய் இம்மையில் பெறுவதோடல்லாமல் மறுமையில் நித்திய ஜீவனையும் சுதந்தரிப்பான் இந்த ஆயக்காரன். மத்தேயுக்கு கிடைத்த மற்றொரு பலன் நித்திய ராஜாவாம் இயேசு கிறிஸ்துவின்

சுவிசேஷத்தை பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதும் பாக்கியத்தையும் பெற்றான். இப்புத்தகம் புதிய ஏற்பாட்டின் முதல் புத்தகமாகவும், வேதாகமத்தின் நாற்பதாம் புத்தகமாகவும் அமையப் பெற்றிருக்கிறது.

வாலிபர்களாகிய நமக்கு இவன் தரும் பாடம் என்னவெனில் இயேசு தன்னைப் பின்பற்றும்படி அழைத்த பொழுது, ஆண்டவரே அடியேனின் பெற்றோரிடம் அனுமதி பெற்று வருகிறேன் என்றோ, அல்லது அரசாங்க உயர் அதிகாரிகளிடம் ஆலோசித்து விட்டு வருகிறேன் என்றோ சொல்லாமல், உடனே பின்சென்றான். வாலிபர்களாகிய நாமும் மார்க்க சம்பந்தப்பட்ட விஷயங்களில் ஆண்டவரின் வார்த்தை என்ன சொல்கிறது என்பதையும், ஆலோசனைகளுக்கு ஆவிக்குரியவர்களிடம் செல்லு வதையுமே நாடவேண்டும்.

நண்பர்களே! இந்த இளம் பிராயத்தில் என் ஆசைகளை துறந்து இயேசுவண்டை சேர்ந்தால் என்ன நன்மை கிட்டும் என்ற ஒரு கேள்வி நம் உள்ளத்தில் வருவது இயல்பு. மத்தேயுவிடமிருந்து நாம் இதற்கு பதில் பெறலாம். ஆண்டவர் உங்களிடம் எதையும் இலவசமாய் கேட்கவில்லை. நீங்கள் அவருக்காய் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் கணக்குப்பார்த்து நூறத்தனையாய் உங்களை ஆசீர்வதிப்பார். கிறிஸ்துவுக்காய் இழந்தவன் எவனும் தரித்திரனாவதில்லை. சங்கீதக் காரனாகிய தாவீது சொல்வதைக் கேளுங்கள்: "....அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை. (சங்.37:25)".

நாமும் இந்த வாலிபப் பிராயத்தில் நமது சிருஷ்டி கர்த்தரை நினைத்து நமது வாழ்க்கையை சீர்ப்படுத்தி அவருடைய சித்தத்திற்கு நம்மை கீழ்ப்படுத்தி, ஈலோக வாழ்க்கையிலும், மேலோக வாழ்க்கையிலும் செழித்துவாழ நம்முன் நிறுத்தப்பட்ட மத்தேயுவைப் போல சுவிசேஷத்தின் சத்தியத்திற்கு நம்மைக் கீழ்ப்படுத்தி, பரலோக பாக்கியத்தைப் பெறுவோமாக!

**ஜே. பிக்கின்ஸ்**

## நீதிமொழிகள் புத்தகத்தை எழுதிய ஆசிரியர்கள்

1. சாலொமோன் ( 1:1; 10:1, 25:1)
2. ஞானமுள்ளவர்கள் –( 22:17, 24:22, 24:23–24)
3. ஆகூர் (30:1)
4. ராஜாவாகிய லேமுவேல் (31:1)

# வெளிப்படுத்தின விசேஷம்

இந்தக் கட்டுரையிலிருந்து, வெளிப்படுத்துதல் நூலை, ஒவ்வொரு வசனமாகப் படிப்பது ஆரம்பமாகிறது. இந்தத் தொடரின் ஆசிரியர் ஆங்கிலத்தை தாய்மொழியாகக் கொண்டுள்ளபடியால், கட்டுரைகள், கிங்ஜேம்ஸ் மொழியாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படுகிறது. ஆங்கில மொழிக்கும், தமிழ்மொழிக்கும் கட்டமைப்பில் உள்ள வேறுபாடு காரணமாக, சில நேரங்களில் தமிழ் மற்றும் ஆங்கில வேதாகமங்களிலுள்ள வசனங்களின் வரிசை மாறுபடுகிறது. ஆகையால், வெளிப்படுத்தின நூலில், எடுத்த எடுப்பிலேயே மொழி அடிப்படையில் உள்ள வேறுபாடு போல, இக்கட்டுரையில், ஒரு குறிப்பிட்ட வசனத்திலிருக்கிறது என்று சொல்லப்படுபவைகள், தமிழ் வேதாகமத்தில் வேறு வசனத்தில் இருக்கும். இதில் எதுவுமே தவறல்ல. முக்கியமான காரியமென்னவெனில் ஒருவேளை வரிசை மாறியிருந்தாலும், ஏதாவது ஒரு இடத்தில் இருக்கவேண்டும். ஆகவே, இந்தக் கட்டுரையில் வரும் வசனப்பகுதிகளைப் படிக்கும்போது, தமிழ்வேதாகமத்தில் வசனங்கள் சற்று முன்னும், பின்னும் இருக்குமென்பதை தயவு செய்து நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

முதல் இரண்டு வசனங்களை நாம் படிக்கும்போது, இந்நூல் “இயேசுக்கிறிஸ்துவின் வெளிப்படுத்துதல்” என்பதை அறியலாம். இந்த வார்த்தைகள் பிதாவாகிய தேவனிடத்திலிருந்து ஆரம்பமாகி, அவர் அவைகளை கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவுக்கு கொடுத்து, அவைகளை அவர் தமது “தூதனுக்கு” கொடுத்து (Message), அவர் அவ்வார்த்தைகளை அப்படியே யோவானுக்குக் கொடுத்து, அவைகளை அவன் எழுதியுள்ளான். யோவான்.16:12-15 வரை உள்ள வேத பகுதியில், இயேசு அப்போஸ்தலர்களிடம், “சகல சத்தியமும்”(புதிய ஏற்பாட்டின் வார்த்தைகள்) பரிசுத்த ஆவியினாலே அவர்களுக்குக் கொடுக்கப்படுமென்றும், அவைகளை அவர் கிறிஸ்துவினிடமிருந்து பெறுவார் என்றும், கிறிஸ்துவானவர் அவைகளைப் பிதாவினிடத்திலிருந்து பெறுவார் என்றும் சொன்னார். வெளி.1:1-2 வசனங்களில் நாம் காணும் ஏவுதலின் அதே வழிமுறை போலத்தான் இதுவும். இவைகள், யோவானுடைய சொந்த வார்த்தைகள் அல்ல. யோவான் தன்னுடைய எல்லா எழுத்துக்களுக்கும் ஒரு உண்மையுள்ள சாட்சி. (யோவா.19:34 ,35;21:24;I.யோவா.1:2,3,4:14) அவர் என்னத்தைக் கண்டாரோ, பார்த்தாரோ, அவைகளை மாத்திரம் எழுதியுள்ளார். வெளிப்படுத்தலிலும் இதுதான் உண்மை.

ஆகையால், இந்நூலின் ஒவ்வொரு வார்த்தையும் பரலோகத்தின்

தேவனிடத்திலிருந்து ஆரம்பமாகிறதென்றும், இந்நூலிலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் அவருடையதுதானென்றும் நாம் திடமாக நம்ப முடியும். (வேதாகமத்தின் பிறபகுதிகள்போல) அதுமாத்திரமல்ல, வெளிப்படுத்தல் யாருக்கென்றும், அதன் நோக்கம் என்னவென்றும் காட்டுகிறார். இது, "அவருடைய ஊழியக்காரர்களுக்கு". அதன் பொருள், கிறிஸ்துவின் சபையாகிய, கர்த்தருடைய சரீரத்தின் அங்கமாயிருக்கிற, உண்மையான புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களுக்கு (எபே. 1:22,23,4:4,5:23-24). இந்தப் புத்தகத்தின் நோக்கம், "சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளைக் காட்டுவது". வசனம் 3-(22:10ம்) "காலம் சமீபமாயிருக்கிறது" என்று சொல்கிறது. இது ஒரு முக்கியமான அறிவிப்பு. ஆதிச் சபையிலிருக்கிறவர்கள் மீது வரப்போகின்ற சம்பவங்கள் குறித்து வெளிப்படுத்தல் அதிகமாகப் பேசுகிறது. இதிலுள்ள சிலபகுதி, உலகத்தின்முடிவு, நியாயத்தீர்ப்பின் நாள், நித்திய பலன் மற்றும் தண்டனை (எதிர்காலத்தில் நடக்கக் கூடிய காரியங்கள்) சம்பந்தமாக உள்ளது. ஆனால், பிரதானமாக, ரோம சாம்ராஜ்யத்தின் நாட்களில் நடைபெறப்போகும் காரியங்கள் பற்றி விவரிக்கிறது. அவைகளில் பெரும்பாலானவை, இந்நூலை வாசிப்பவர்களின் காலத்தில் நடைபெறுபவையாகச் சொல்கிறது. நமது பின்னணி பாடத்தில் நாம் பார்த்தபடி, இந்நூல், பாடுகள்படும் கிறிஸ்தவர்களுக்கு ஆறுதலையும், ஊக்கத்தையும் கொடுக்கிறது. இந்நூலில் உள்ள சம்பவங்கள், பிரதானமாக உலகத்தின் முடிவு பற்றிப் பேசுகிறது எனச் சொல்கிறவர்கள் (ஆயிரம் வருட அரசாட்சிக்காரர்கள் மற்றும் அவர்களைப் போன்றவர்கள்) இந்த நூலின் மூலம் கர்த்தர் என்ன சொல்கிறாரோ அதை ஒதுக்கி அதனுடன் முரண்படுகிறார்கள்.

ஒன்றாம் அதிகாரத்தின் மூன்றாம் வசனம், வெளிப்படுத்தலில் உள்ள ஏழு "ஆசீர்வாதங்களின்" முதல் ஆசீர்வாதம் பற்றி பேசுகிறது " இந்த தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்". இது எவ்வளவு உற்சாக மூட்டக்கூடியது! நாம் விட்டுவிடுவதற்கும், உதாசீனப்படுத்துவதற்குமான புத்தகமல்ல இது. இந்நூலை நாம் படிக்கவில்லையென்றால் தேவ ஆசீர்வாதங்களிலிருந்து நம்மை நாமே வஞ்சித்துக் கொள்கிறோம். இதை "வாசிக்கிறவர்கள்" அதை முறையாகச் செய்தால் அவை என்ன போதிக்கிறதோ அவைகளையும் சேர்த்துக்கொள்வார்கள்! இதை "கேட்கிறவர்கள்" என்பதின் பொருள், இந்தப் புத்தகம் வாசிக்கப்பட்டு போதிக்கப்படும்பொழுது, கவனிப்பவர்களையும், இப்புத்தகத்தை சொந்தமாக படிப்பவர்களையும் உள்ளடக்கியது தான். இந்தக் கட்டுரைகள், நாம் ஆசீர்வதிக்கப்படும்படியாக உதவி செய்யமுடியும். ஆனால், நாம் இந்த புத்தகம் நம்மை என்ன செய்யச் சொல்கிறதோ அதைச்

செய்யவேண்டும். வெளிப்படுத்தல் வெறுமனே தகவலுக்காக மாத்திரமல்ல. புதிய ஏற்பாட்டின் மற்ற நூல்களில் காணப்படாத புதிய கட்டளைகள் எதையும், இந்நூல் நமக்கு கொடுக்காவிட்டாலும், நாம் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு, கண்டிப்பாக பின்பற்ற வேண்டிய அறிவுரைகள் கொண்டுள்ளது. தேவனுடைய வார்த்தைகளைக் கேட்பவர்களாக மாத்திரம் இருப்பது ஒருபோதும் போதுமானதல்ல. நாம் கேட்டு அதின்படி செய்யவேண்டும் (யாக்.1:22-25). கேட்டு, அதின்படி செய்தவர்கள் பற்றி, இயேசு, கன்மலையின்மேல் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுகிறார். (மத்.7:24-27,லூக்.6:47-49;8:21; ரோமர்.2:13).

மேலும் "தீர்க்கதரிசனம்" பற்றி கர்த்தர் பொதுவான முறையில் பேசின போது, எதிர்காலத்தில் நடப்பதை முன்கூட்டியே சொல்வது என்ற பொருளில் மாத்திரம் பேசாமல், தேவனிடத்திலிருந்து ஏவப்படும் எந்த வார்த்தையையும் குறிக்கிறதாக அது உள்ளது. (1.கொரி.14:3). இங்கே வெளி. 1:3-ல் இந்த "தீர்க்கதரிசன" வசனங்களை "கைக்கொள்ளவேண்டும்" என்றுள்ளது. நாம், முன் சொல்லப்படுபவைகளுக்கு கீழ்ப்படிய முடியாது. ஆனால் அறிவுரைகளுக்குக் கீழ்ப்படிய முடியும். ஆகவே, வெளிப்படுத்தலில் உள்ள தீர்க்கதரிசனமென்பது, நாம் பின்பற்றும்படியான அறிவுரைகளையும் உள்ளடக்கியது.

வசனம் 4, வெளிப்படுத்தல், "ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கு" எழுதப்பட்டது என நமக்குச் சொல்கிறது. அங்கே ஆசியா என்பது, இன்றைக்கு நாம் அறிந்திருக்கிற அரபு தீபகற்பம், சைபீரியா, இந்திய துணைக்கண்டம், சீனா போன்றபகுதிகளை உள்ளடக்கிய பரந்துவிரிந்த ஒரு கண்டத்தைக் குறிக்கவில்லை. ரோம சாம்ராஜ்ஜியத்திற்குட்பட்ட சின்ன ஆசியாவையே குறிக்கிறது. இது இப்பொழுதுள்ள துருக்கிநாட்டின் மேற்குப் பகுதியாகும். அதுமாத்திரமல்ல, அந்நாட்களில், இவைகள் மாத்திரமே ஆசியாவிலிருந்த கிறிஸ்துவின் சபைகள் அல்ல; ஒன்றாம் அதிகாரம் 11-ம் வசனத்திலும் மற்றும் 2,3 அதிகாரங்களிலும் சொல்லப்பட்டுள்ளபடி, இந்தப் புத்தகம் யாருக்கு எழுதப்பட்டதென்று ஆசியாவிலுள்ள ஏழு கிறிஸ்துவின் சபைகளைப் பெயரிடுகிறார். வெளிப்படுத்துதல் அந்தக் குறிப்பிட்ட, கிறிஸ்துவின் சபைகளுக்கு மாத்திரமல்லாமல், "தம்முடைய ஊழியக்காரர்களுக்கும்" எழுதப்பட்டுள்ளது (1:1) அதன் பொருள் மீதியான எல்லாக்காலங்களிலும், எங்கும் வாழும் எல்லாக்கிறிஸ்தவர்களுக்கும் என்பது தான். வசனம் 4-ல், புதிய ஏற்பாட்டின் ஏவப்பட்ட நிருபங்களில் கையாண்ட வாழ்த்து முறையை நாம் காணலாம். தேவனிடத்திலிருந்து உங்களுக்கு, "கிருபையும், சமாதானமும் உண்டாவதாக" என்று. தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்துவதின் மூலம், தேவனிடத்திலிருந்து கிருபையைப் பெற்றுக்கொள்கிறோம். (யாக்.4:6-10). அதன் பொருள் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது (பிலி.2:5-8).

அதுபோலவே, சமாதானமும், தேவனிடத்தில் ஒப்புரவாகுதலும், கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து அவருக்குக் கீழ்ப்படிவதின் மூலம் வருகிறது. (எபே.2:14-18). துன்மார்க்கருக்கு சமாதானமில்லை. (ஏசா.48:22,57:21)

ஆகவே, இந்த வாழ்த்து, புதிய ஏற்பாட்டு நிருபங்களில் ஒன்றிலுள்ள வாழ்த்துதலைவிட மேலோட்டமான அளவில் வேகமாக வாசித்துச் சொல்வது போன்றதல்ல. இந்த வாழ்த்துக்களில், கர்த்தருக்கு கீழ்ப்படிகிறவர்களுக்கான ஊக்கத்தை நாம் காண்கிறோம். மேலும் வசனம் 4-ல் கர்த்தர் " இருக்கிறவர், இருந்தவர், வருகிறவர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளார். (இதே வகையான விளக்கத்தை 1:8;4:8 மற்றும் 11:17-ல் காணமுடியும்) இது, பிதாவானவர், உண்மையில் பூமிக்கு "வருவார்" என்று போதிப்பதில்லை. இயேசுவானவர் தான், திரும்ப வருவாரேயொழிய பிதாவானவர் அல்ல, இந்தப் பகுதி, தேவனுடைய நித்திய தன்மையை விவரிக்கிறது. அவர் இருந்தார், இருக்கிறார், இருப்பார். (அதாவது, கடந்த, நிகழ், எதிர்காலம்). தேவன் நித்தியமானவர் என்ற உண்மையை விவரிக்க மூன்று முக்கியமான காலங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவர் எப்பொழுதும் ஜீவித்துக்கொண்டிருந்தார். இப்பொழுதும் ஜீவிக்கிறார், எதிர்காலத்தில் எப்பொழுதும் ஜீவித்துக்கொண்டிருப்பார், இந்த வேத பகுதியில், வருகிறவர் என்பதின் பொருள், இருப்பார்? (Will be) தேவனின் எதிர்கால ஜீவியம் பற்றிப் பேசுகிறதேயொழிய, மீண்டும் பூமிக்கு வருவார் என்றல்ல. இந்தப் பகுதி, பிதாவானவர் பூமியில் இருந்தார் என்றோ, பூமியில் இருக்கிறார் என்றோ பூமிக்கு வருவார் என்றோ சொல்கிறதா? கண்டிப்பாக இல்லை! மீண்டுமாக, இந்தப் பகுதி, தேவனுடைய நித்தியத் தன்மையை குறிப்பிடுகிறது. பிதாவானவர், ஒருபோதும் இப்பூமிக்கு வரமாட்டார்.

இறுதியாக, வசனம் 4 மற்றும் 5, கிருபை மற்றும் சமாதானத்தின் ஆசீர்வாதங்கள் பிதாவினிடத்திலிருந்து வருகிறதென்றும், பிதாவானவருடைய சிங்காசனத்திற்கு முன்பாக உள்ள ஏழு ஆவிகளிடத்திலிருந்து வருகிறதென்றும், (எண் ஏழு அடிக்கடி பூரணம் அல்லது முழுமையை பிரதி நிதித்துவப்படுத்துவதால், சிலர், இந்த "ஏழு ஆவிகள்" பரிசுத்த ஆவியென்று சொல்கிறார்கள். ஆனால் தேவன் வெளி.1:4;3:1: 4:5 மற்றும் 5:6-ல் உள்ள "ஏழு ஆவிகள்" என்னவென்று எங்குமே விளக்கவில்லை. ஒட்டுமொத்த வேதாகமத்திலும், இந்த குறிப்பிட்ட நான்கு வசனங்களில் மாத்திரம் இது உள்ளதை நாம் காண முடியும்). இது இயேசுக்கிறிஸ்துவிடமிருந்து வருகிறதென்று நமக்குக் காட்டுகிறது.

அடுத்த கட்டுரையானது, வெளி.1:5-7ல் இயேசுக் கிறிஸ்துவானவர் விவரிக்கப்பட்டுள்ளதை பரிசோதித்துப் பார்ப்பதிலிருந்து ஆரம்பமாகும்.

EZSR

Jon Macon

தெரிந்து கொள்ளுங்கள்

# "பாடுதல்"

## பாடம் - 9

**முன்னுரை:**

1. வேதாகமம், விசேஷக் குரல் வளம் தேவைப்படுகிறது என்றோ அல்லது மற்ற மனிதர்களின் செவிக்கு இனிய குரல் தேவை என்றோ எங்கும் போதிக்கவில்லை. தேவனைப் பாடிப்பிரியப்படுத்த இது ஒரு முக்கிய தேவையன்று.
2. தவறான மனோநிலையுடன் அல்லது தவறான வார்த்தைகளைக் கொண்டு பாடுபவர்களைக் காட்டிலும், சுதி தவறி ஆனால் இருதயத்திலிருந்து சரியான புரிந்துகொள்ளுதலோடும், ஆவியோடும் பாடும் கிறிஸ்தவனே தேவனுடைய பார்வையில் அழகாயிருப்பான். தான் கட்டளையிட்டபடி பாடும்போது சுதி தவறி பாடுவது கூட தேவனுக்கு இனிதாகவே இருக்கும்.
3. "நான் ராகத்தை வாளியிலா கொண்டுவர முடியும்" என்று சிலர் கூறுவர், நீங்கள் கொண்டு வர முடிந்தாலும் தேவனுக்கு அது பிரியமாயிராது. பாடலை இதயத்திலிருந்து பாடவேண்டும்.
4. கருத்துக்களையோ அல்லது சத்தியத்தையோ ஒரு சத்தத்தின் மூலம் வெளிப்படுத்தும் ஒரு செயல் தான் இசை என்று நாம் விளக்கம் தர முடியும்.
5. இசையில் மூன்று வகையுண்டு:-
   - a. வாய்ப்பாட்டு (வாயிலிருந்து வருவது, இது விசில், ரீங்காரம், பாடல் மற்றவை)
   - b. இசைக்கருவிகளால் எழுப்பப்படும் இசை
   - c. வாய்ப் பாட்டும், இசைக்கருவியும் கலந்து வரும் இசை
6. புதிய ஏற்பாட்டை கவனமாய் வாசித்தால் எவ்வகை இசை தேவனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது எனக் காணலாம்.

**விவாதம்:-**

**I. இசையைப் பற்றி புதிய ஏற்பாடு என்ன போதிக்கிறது?**

**A**. மத்தேயு. 26:30

**B**. அப். 16:25

**C**. ரோமர். 15:9

**D**. 1. கொரி. 14:15

**E**. எபே. 5:19

**F**. கொலோ.3:16

**G**. எபி. 2:12

**H**. எபி. 13:15

I. யாக்கோபு 5:13

**J**. ஒவ்வொரு வசனமும் தேவன் பாடுதலை அங்கீகரிப்பதாக எடுத்துரைக்கிறது. விசிலையோ, ரீங்காரத்தையோ அல்லது மற்ற குரல் ஆற்றலையோ தேவன் அங்கிகரிக்கவில்லை.

## II. பாடும்போது இசைக்கருவியை பயன்படுத்துவதை பற்றி என்ன?

**A**. ரோமர். 10:17

1. கிறிஸ்தவன் **"விசுவாசித்து நடக்கவேண்டும்"** அப்படி என்றால் **வேதாகமம் என்ன போதிக்கிறதோ** அதையே செய்யவேண்டும்.
2. விசுவாசத்தை ஒருவன் எங்கு பெற்றுக்கொள்கிறான்?
3. புதிய ஏற்பாடு, இசைக்கருவிகளை பயன்படுத்தலாம் என்று போதிக்கவில்லை, தேவனுடைய வார்த்தையில் அவைகளில்லை, என்பதால் ஒருவன் விசுவாசித்து நடக்க முடியாது.

**B**. வேதாகமத்தில் அது இல்லை என்றால், அது எங்கிருந்து வருகிறது

## III பாடுவதின் நோக்கம்:-

**A**. கொலோ. 3:16

**B**. யாக்கோபு. 5:13

**C**. எபே. 5:19

## IV. பாடுவதினால் ஒரு கிறிஸ்தவன்:-

**A**. எபே. 5:19

**B**. கொலோ. 3:16

**C**. 1. கொரி. 14:15

**D**. 1. கொரி 15:15

## V. நாம் என்ன பாடவேண்டும் என்பதை பற்றிய கட்டளை.

**A**. எபே. 4:15, சத்தியத்தை பேசுகிறோம். (எபே. 5:19; கொலோ. 3:16) பேசுவதாகும். ஆகவே நாம் பாடும்போது சத்தியத்தை பேச வேண்டும்.

**B**. எவ்வகைப் பாடல்கள்?

1. சங்கீதம்
2. கீர்த்தனை
3. ஞானப்பாட்டுகள்.

## IV. நாம் எப்படிப் பாடவேண்டும்?

**A**. வெளி.22:18-19; நாம் கூட்டவோ அல்லது குறைக்கவோ கூடாது

**B**. கலா. 1: 6-9; தேவன் கொடுத்ததற்கு பதிலாய் வேறொன்றை ந ாம் உபயோகிக்கக்கூடாது.

இக்கொள்கைகளை மீறுகிறது.

1.விசுவாசத்தில் நடக்கிறோம். ஒருவன் தன் சுயத்திட்டத்தை சேர்ப்பான் என்றால் அவன் விசுவாசத்தினால் நடப்பதில்லை. (ரோமர் 10:17) (2.கொரி.5:7)

2.கூட்டுதல் தேவ வார்த்தையை பலனில்லாததாய் ஆக்குகிறது. (மத். 15:6-7)

3. பாடவேண்டும் என்ற தேவனின் குறிப்பிட்ட கட்டளையை மீறுகிறது.

4. விடுபட்டவைகளின் விதியை இது மீறுகிறது.

**முடிவுரை:-**

1. தேவனுடைய மக்கள் அவரை துதித்துப்பாட அதிகாரம் பெற்றிருக்கிறார்கள்.
2. பாடுதலை இசையாகப் பயன்படுத்த தேவன் தெரிந்துகொண்டார். இந்த தெரிந்து கொள்ளுதல் மனிதனால் உண்டானதல்ல. ஆகவே மனிதன் "கூட்டவோ அல்லது குறைக்கவோ" முடியாது. ஆகவே நாம் தேவ திட்டத்தை பின்பற்றுவோம். மனித வழிகளை அப்படியே விட்டுவிடுவோம்.

**.Toney.L. Smith** **டோனி ஸ்மித்**

## சங்கீதப் புத்தகத்தின் ஆசிரியர்கள்

"சங்கீதம் என்றாலே தாவீதுதான் எழுதினான் என்று நினைப்போம். ஆனால், மொத்தம் 7 ஆசிரியர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதியிருக்கிறார்கள்"

| | | |
|---|---|---|
| 1. தாவீது | – | 73 சங்கீதங்கள் (பெரும்பாலும் 1 முதல் 72க்குள்) |
| 2. ஆசாப் | – | 12 சங்கீதங்கள் (50, 73–83) |
| 3. கோராகின் புத்திரர்கள் | – | 10 சங்கீதங்கள் (42,44–49, 87,88) |
| 4. சாலொமோன் | – | 1 அல்லது 2 சங்கீதங்கள் (72?, 127) |
| 5. மோசே | – | 1 சங்கீதம் (90) |
| 6. எஸ்ராகியனாகிய ஏமான் | – | 1 சங்கீதம் (88) |
| 7. எஸ்ராகியணாகிய ஏத்தான் | – | 1 சங்கீதம் (89) |

# எது என் பாவத்தைக் கழுவி சுத்திகரிக்கும்?

மனிதகுலம் பரமனால் படைக்கப்பட்ட சில நாட்களுக்குள், பாவம் என்னும் படுகுழியில் பரிதாபமாய் விழுந்தது. தம் சாயலில் மனிதனைப் படைத்த மாண்பினால் அவனை நித்திய மரணத்தில் இருந்து மறுபடியும் மலரச் செய்ய வேண்டும் என்பதற்காய், தான் விளம்பின வேதத்தில் ஒரே வழியைக் காட்டுகிறார். ஆனால்,சில மனிதர்களோ தேவனை விட நாம் தேறினவர்கள் என்ற மமதையி னைக் கொண்டு தாங்கள் தான் சரியானதைச் செய்கிறோம் என மனமேட்டிமை கொள்கிறார்கள்.

1. சிலர் நாம் சான்றோனாய், குணக்குன்றாய், நீதிமானாய் இருந்தால் போதும் பாவத்தின் பயங்கரப்பிடியிலிருந்து விடுதலையடைந்து விடலாம் என்கிறார்கள். சபையின் சரித்திரத்தைச் சித்தரிக்கும் புத்தகமாகிய அப்போஸ்தல நடபடிகளில் 10-ம் அதிகாரத்தில் குணசாலியாய், நீதிமானாய், சான்றோனாய் விளங்கிய மனிதனைப் பற்றிக் காணலாம். அவன் தேவபக்தி உள்ளவனும், தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணி வந்தான் [அப் 10:12] நீதிமானாய் இருந்தபடியால் பகைவரிடத்திலும் இவனுக்கென்று ஒரு தனி மரியாதை விளங்கிற்று. இந்த மனிதனின் பெயர் கொர்நேலியு இவன் இப்படிப்பட்ட குணமுடையவனாய் இருந்த போதிலும் இரட்சிப்படைய தேவனுடைய வார்த்தையை,தேவ ஊழியனாகிய பேதுருவிடம் கேட்க வேண்டியதாயிருந்தது. [அப் 11:14] அவன் நல்லவன் என்பது எத்தனை உண்மையோ அதைப் போல் அவனின் பாவம் சுத்திகரிக்கப்பட வேண்டியதும் மெய்யாய் இருந்தது.

2. மற்றும் சிலரோ நம் அண்டை அயலார்களிடம் நல்லவர்களாய், இரக்கமுள்ளவர்களாய் இருந்தால் போதும் தேவனின் பார்வையில் நீதிமானாய் திகழுவோம் என்கிறார்கள். கர்த்தருடைய சபை அங்கத்தினர்களோடு பேசின வேளையில், அவர்கள், சில சகோதரர்களைப் பற்றி இப்படியாய் பேசுவார்கள், அந்த சகோதரன் ஒரு நல்ல கிறிஸ்தவன், நான் பார்த்ததிலே மிகச் சிறந்தவன், நீங்கள் அவர் அணிந்திருக்கும் சட்டையைக் கேட்டாலும் உடனே கழற்றித் தருவார் என்பார்கள். ஆனால், அந்த சகோதரன் தன் மனைவிக்கு துரோகம்

செய்வதும், பிள்ளைகளுக்கும், தேவனுக்கும் விரோதமாய் நடப்பதும் மறந்துபோன உண்மையாய் திகழ்கிறது. பிரசங்கியார்களும் உண்மையற்ற உறுப்பினர்களை ஏதோ கட்டடம் கட்ட காசுக் கொடுத்ததாலும், போதகர் செய்த சில காரியத்தில் உதவியாக இருந்ததாலும் இவர்களை நேராய் பரலோகம் செல்வார்கள் என சொல்வார்கள். அன்பான நண்பர்களே, அன்பான அயலானாக இருப்பதும், உபத்திரவக்காலத்தில் உதவுவதும் மெச்சக்கூடியதுதான், ஆனால் பாவத்தின் சம்பளமான மரணத்திலிருந்து [ஆவிக்குரிய] இரட்சிக்கப்பட இவை போதுமானதல்ல. சபைக்குப் போகத் தேவையில்லை சில நல்ல காரியங்களை கடைபிடித்தால் போதும், பாவக்கறைகள் கழுவப்படும் என்பது மெய்யல்ல என்று நாம் கற்றுக்கொள்ள வேண்டும். தர்மங்கள் செய்வதால் தேவன் நம் ஒழுக்கச்சீர்கேட்டையும்,வேசித்தனத்தையும் ஒருபோதும் மறந்துவிடுவதில்லை.

3. எது என் பாவத்தைக் கழுவி சுத்திகரிக்கும்? நமக்காக கொல்கொதாவின் சிகரத்தில் சிலுவையில் சிந்திய இயேசுவின் இரத்தம்தான் நம் பாவத்தைக் கழுவி சுத்திகரிக்கும். இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை [ எபி 9:2] பின்வரும் வாக்கியங்கள், தேவ குமாரன் சிந்திய இரத்தம்தான் நம் பாவத்தை சுத்திகரிக்கும் என போதிக்கிறது. [மத். 26:28,எபே 1:7, கொலோ 1:14, எபி. 9:12-14, Iபேதுரு 1:18,19, வெளி 1:6;5:9, Iயோ 1:7, அப் 20:28]

***B.J. Clarke***

**சங்கீதப் புத்தகத்தில் வரும் முக்கிய வார்த்தைகள்**

| | |
|---|---|
| நீதிமான் /நீதி | (120 முறை) |
| கேள் / கீழ்ப்படி | (65 முறை) |
| இரட்சி / இரட்சிபு | (80 முறை) |
| துதி | (158 முறை) |
| இரக்கம் | (93 முறை) |
| துன்மாக்கன் / துன்மார்க்கம் | (77 முறை) |
| எதிரி / பகைவன் | (70 முறை) |

## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

| | | |
|---|---|---|
| **HINDI** | : | Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049. |
| **ENGLISH** | : | Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049. |
| **TELUGU** | : | Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001. |
| **TAMIL** | : | Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084. |
| **MALAYALAM** | : | Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034. |
| **KANNADA** | : | Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004. |

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN / ERD / WD / PP/5
Posted at Erode HPO on 20, NOV 99
NOV 99 THIRUMARAI AASAAN Regd. No. TN / ERD / 49

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி, இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு."**சான்றிதழ்**" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண். 27, காங்கயம் – 638 701.

Published by Church of Christ, Kangayam.
Printed at Konar Printers, Madurai. Editor : S. RAJANAYAGAM.

PRINTED MATTER
BOOK-POST

TO

From
THE EDITOR
THIRUMARAI AASAAN
Post Box No. 27,
KANGAYAM - 638 701.
Ph:04257 - 20030.